Registered as a Newspaper · பக்கங்கள் 06 · விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம் 04 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · ஆடி 32 · (16-08-1993) · திங்கட்கிழமை · ஓசை 179

## ஐந்து வருடங்கள் சேவை விதி கடைப்பிடிக்க பணிப்பு

அனைத்து திணைக்களங்களும் அரச ஊழியர் இடமாற்றத்தில் ஐந்து வருடச் சேவை விதியைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தும்படி பொது நிர்வாக மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் சுற்றுநிருபம் மூலம் அமைச்சுக்களின் செயலாளர்களைப் பணித்துள்ளார். சில அரச ஊழியர்கள் கஷ்டப் பிரதேசங்களில் ஐந்து வருடங்களுக்குமேல் பணிபுரிய மற்றவர்கள் தாம் விரும்பிய இடங்களுக்கு மாற்றம் பெற்றுப் போவதாகப் பல அரச ஊழியர் செய்த புகாரை அடுத்தே அமைச்சர் இவ்வாறு பணித்துள்ளார். அடிக்கடி பல அரச ஊழியர்கள் இடத்துக்கு இடம் மாற்றப்படுவதால் அரச ஊழியருக்கு உண்டாகும் கஷ்டங்கள் பற்றியும் அமைச்சரிடம் கவலை தெரிவிக்கப்பட்டது.

# அரசின் இன ஒடுக்கலை உடன் தடுத்து நிறுத்துக!

## குமண இன்று வரும்

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்துநின்ற 'குமாரி' கப்பல் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு நேற்று மாலை திருக்கோணமலை நோக்கிப் புறப்பட்டது.

இக்கப்பலில் யாழ். தபால் திணைக்களம் 36 தபால் பொதிகளை அனுப்பி வைத்துள்ளது. மேலும் சுமார் 40 பயணிகளும் செல்கின்றனர். 'குமண' கப்பல் இன்று வருமென எதிர்பார்க்கப்படுகிறது. (யோ)

## வோய்ஸ் ஒவ் அமெரிக்கா எதிர்ப்பு வலுக்கிறது

சிலாபத்திற்கு அண்மையிலுள்ள இரணவிலவில் மேற்கொள்ளப்படும் ''வோய்ஸ் ஒவ் அமெரிக்கா'' மற்றும் பாரிய ஹொட்டல்கள் அமைக்கும் திட்டத்திற்கு தேவாலயமும் மக்களும் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இரணவிலவில் மேற்கொண்டுள்ள சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் கைவிட வேண்டும் எனவும் சிலாபம் மேற்றிராணியார் மாக்கஸ் பெர்னான்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார். அமெரிக்க வானொலி நிலையத்திற்கு எதிராக தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை நிராகரித்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச ஹொட்டல் திட்டத்தை நிறுத்த இணங்கினார்.

இவற்றினால் மக்கள் குடியகற்றப்படமாட்டார்கள் மீன்பிடிக்கத் தடைஇல்லை என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால் அப்பகுதியில் மீன்பிடிக்க வேண்டாம் என வோய்ஸ் ஒவ் அமெரிக்கா அதிகாரி கேட்டுள்ளார் என குற்றம் சாட்டப்படுகிறது.

## சத்திர சிகிச்சையில் தவறு; விசாரிக்ககுழு நியமனம்

(கொழும்பு)

உடலின் உள்ளே சத்திர சிகிச்சை கத்தி ஒன்றை வைத்துத் தவறுதலாகத் தைத்ததனால் இரண்டாம்முறை சத்திர சிகிச்சை செய்யப்பட்டு உயிர்நீத்த எஸ். செல்வநாதனின் மரணம் தொடர்பாக பூரண விசாரணை நடத்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் லலித் மெண்டிஸ் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ். செல்வநாதன் அண்மையில் இரண்டாவது முறையாக சத்திர சிகிச்சை செய்யப்பட்ட போது உயிர்நீத்தது தெரிந்ததே.

## பதுங்கியிருந்த சிப்பாய் யானை மிதித்துப்பலி

பதுங்கியிருந்து தாக்க காத் ...

இச்சம்பவம் குறித்து மீகஸ் ...

## உலகத் தமிழர் இயக்கம் ஐ. நாவிடம் கோரிக்கை

சிறிலங்கா அரசு தமிழீழ மக்களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் இராணுவத் தாக்குதல்களையும் பொருளாதாரத் தடைகளையும் நிறுத்துவதற்கு ஐ. நா. சபை உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென உலகத்தமிழர் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ. நா செயலாளர் நாயகம் பூட்றஸ் பூட்றஸ் காலிக்கு விடுத்துள்ள அறிக்கையில் உலகத் தமிழர் இயக்கம் இக்கோரிக்கையை விடுத்துள்ளது. ஜேர்மனியிலிருந்து உலகத்தமிழர் இயக்கத் தலைவர்களில் ஒருவரான திரு நரேந்திரசிங்கம் இந்த அறிக்கையை ஐ. நா. செயலாளர்நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இதில் உலக வங்கி ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் அபிவிருத்திக்கென சிறிலங்கா அரசிற்கு பெருமளவு பணத்தை உதவியாக வழங்கி வருகின்றன. ஆனால் இவ் உதவிகளைப் பெறும் சிறிலங்கா அரசு தனது படைகளுக்கு குண்டு வீச்சு விமானங்களையும் நவீனரக ஆயுதங்கள் வெடி மருந்துகளையும் வாங்கவே இப்பணத்தை பயன்படுத்தி வருகின்றது. இந்த உதவிகளை வறிய மக்களின் நலனிற்கோ நாட்டின் அபிவிருத்திக்கோ சிறிலங்கா அரசு பயன்படுத்துவதில்லை.

இந்த உதவிகள் தமக்கும் சேர்த்தே வழங்கப்படுவதாக தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசு இவற்றை பயன்படுத்தி இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்து வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகிறது. அத்துடன் சர்வதேச சட்டங்கள் எல்லாவற்றையும் மீறிச் செயல்படுகிறது. பொதுமக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவை எதிர்கொள்ள மூளையுள்ளவர் தேவை

### காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் ...

## பரீட்சை விடைத்தாள்கள் திருத்தவேலை ஆரம்பம்

தற்போது நடைபெற்றுவரும் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும்பணிகள் இம் மாதம் 18-ம் திகதியும் அடுத்த மாதம் 1-ம் திகதியும் இரு கட்டங்களாக நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு பாடத்திற்குமுரிய தலைமை வினாத்தாள் திருத்துநர்களுக்கான கலந்துரையாடல் மாநாடு இன்று கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறும்.

இம்மாதம் 14-ம் திகதி வரை நடைபெற்ற பாடங்களுக்குரிய திருத்தும் பணிகள் பதினெட்டாம் திகதியும் ஏனையபாடங்களுக்கான விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் ஒக்டோபர் முதலாம் திகதியும் நடைபெறும் என பரீட்சைத்திணைக்கள ஆணையாளர் ஆ. தர்மதாச சதமுல்ல அறிவித்திருக்கிறார்.

## பல்லேகல தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட இளைஞர் மீண்டும் கைதானார்

(வடமராட்சி)

சிறிலங்கா பல்லேகல முகாமிலிருந்து கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் கொழும்பு கொச்சிக் கடைப் பகுதியில் வைத்து மீண்டும் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

பல்லேகல முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதற்கான ஆதாரங்களை இவரது உறவினர் எடுத்துக் காட்டி விளக்கியதையடுத்து பின்னர் விடுவிக்கப்பட்டார்.

பொலிகண்டியைச் சேர்ந்த க. துரைவீரசிங்கம் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவராவார். கொச்சிக்கடைப் பகுதியில் தினமும் பொலிசாரின் சுற்றிவளைப்பில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். (யோ)

## பல்லேகல முகாமிலிருந்து 40 பேர் இவ்வாரம் விடுதலை

(வடமராட்சி)

கொழும்பு பல்லேகல முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் சுமார் 40 பேர் இம்மாதம் 20ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளனர். இவர்களில் 25 பேர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள்.

இம்மாதம் 17ஆம் திகதி விடுதலை செய்யப்பட இருந்தபோதிலும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா வெளிநாடு ஒன்றுக்கு சென்றிருப்பதாலேயே இவர்களது விடுதலைக்கு மேலும் மூன்று தினங்கள் தாமதமேற்பட்டுள்ளது. வெளிநாடு சென்றிருந்த பிரிகேடியர் கொழும்பு திரும்பியதும் மேற்படி இளைஞர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். (யோ)

## கல்லடிப் பாலத்தில் புதிய பொலிஸ் முகாம்கள்

மட்டக்களப்பு கல்லடிபாலத்தின் இறக்கத்தில் சிறிலங்கா பொலிசார் புதிதாக முகாம்களையும் காவலரண்களையும் அமைத்துள்ளனர்.

இதனால் இப்பகுதியால் செல்லும் பயணிகள் அனைவரும் பொலிசாரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில்

## சத்திர சிகிச்சையில் தவறு; விசாரிக்கக்குழு நியமனம்

(கொழும்பு)

உடலின் உள்ளே சத்திர சிகிச்சை கத்தி ஒன்றை வைத்துத் தவறுதலாகத் தைத்ததனால் இரண்டாம்முறை சத்திர சிகிச்சை செய்யப்பட்டு உயிர்நீத்த எஸ். செல்வநாதனின் மரணம் தொடர்பாக பூரண விசாரணை நடத்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் லலித் மெண்டிஸ் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ். செல்வநாதன் அண்மையில் இரண்டாவது முறையாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டபோது உயிர்நீத்தது தெரிந்ததே.

## பதுங்கியிருந்த சிப்பாய் யானை மிதித்துப்பலி

பதுங்கியிருந்து தாக்ககாத்திருந்த ராணுவச்சிப்பாயின் தலையை காட்டுயானை மிதித்ததால் அவர் அவ்விடத்திலேயே மரணமானார். இச்சம்பவம் கந்தளாய்-சேருவிலப் பாதையில் இருக்கும் மீகஸ்கொடல்ல இராணுவ முகாமருகே இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கொல்லப்பட்டவர் சிறிலங்கா பீரங்கிப் படையின் 5ஆம் படையணியைச் சேர்ந்த லான்ஸ் பொம்பொடியரான கழுபண்டாகே அருண திலகரத்னா (வயது 28) என்பவராவர்.

இச்சம்பவம் குறித்து மீகஸ்கொடல்ல முகாமைச் சேர்ந்த புஷ்பசிறி பண்டார என்பவர் தெரிவிக்கையில்; இறந்தவரை தனக்கு 8 வருடமாகத் தெரியும் எனவும் சம்பவம் நடைபெறுவதற்கு முதல் நாள் இரவு 7.45 மணியளவில் சார்ஜன் ஜயதிலக என்பவரின் தலைமையில் ''காத்திருந்து தாக்கும் காவல் கடமைக்கு', 22 பேர் சென்றதாகவும் மறுநாள் காலை 6.15 மணியளவில் தான் வெடிச்சத்தம் ஒன்றை கேட்டதாகவும் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பணம் பறிப்பு தொடர்பாக 3 றிசர்வ் பொலிசார் கைது

(மாத்தளை)

மாத்தளையில் ஒருவரிடமிருந்து பணம் பறித்தது தொடர்பாக மூன்று றிசர்வ் பொலிசார் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து 2007 ரூபா பறிக்கப்பட்டது தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## பல்கலைக்கழக சுயாதீனத்தை அங்கீகரிக்க அரசு முடிவு

### ஹமீத்தின் அறிக்கை அரசு ஏற்பு

(கொழும்பு)

பூரண அதிகாரத்தைப் பயன்படுத்துதல் உட்பட பல்கலைக்கழக சுயாதீனத்தை ஸ்திரப்படுத்தும் வண்ணம் பல்கலைக்கழக சட்டத்தை திருத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவின் அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் ஹமீத் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியக்குழு ஆகியவற்றிற்கு இதுவரை இருந்த அதிகாரத்தைப் பூரணமாக பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் ஹமீத் தெரிவித்தார். இதுவரை பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடைய பல அதிகாரங்கள் பல்கலைக்கழக மானியக் குழுவிடம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பிரகாரம் பாடநெறிகளை அறிமுகம் செய்தல், மாணவர்களைச் சேர்த்தல், துணைவேந்தர் நியமனம், மாணவர் சேமநலன், மாணவர் கண்காணிப்புச் சபை, நடவடிக்கைகளும் நிர்வாகமும், நிதி நிர்வாகம் ஆகிய அதிகாரங்கள் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படும்.

புதிய திருத்தங்களின் அடிப்படையில் பல்கலைக்கழக நிர்வாக அதிகாரசபை ஒன்று பல்கலைக்கழகத்திலேயே அமைக்கப்படும். உபவேந்தர்கள் நியமனமுறை மாறும்.

இச் சிபார்சுகளை 1987ஆம் ஆண்டு அமைச்சர் ஹமீத்தின் தலைமையில் அமைக்கப்பட்ட 11 பேர் கொண்ட குழுவே இச் சிபார்சுகளைச் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கோரிக்கையை விடுத்துள்ளது. ஜேர்மனியிலிருந்து உலகத்தமிழர் இயக்கத் தலைவர்களில் ஒருவரான திரு நரேந்திரசிங்கம் இந்த அறிக்கையை ஐ.நா. செயலாளர்நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இதில் உலக வங்கி ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் அபிவிருத்திக்கென சிறிலங்கா அரசு தனது படைகளுக்கு குண்டு வீச்சு விமானங்களையும் நவீனரக ஆயுதங்கள் வெடி மருந்துகளையும் வாங்கவே இப்பணத்தை பயன்படுத்தி வருகின்றது. இந்த உதவிகளை வறிய மக்களின் நலனிற்கோ நாட்டின் அபிவிருத்திக்கோ சிறிலங்கா அரசு பயன்படுத்துவதில்லை.

சிறிலங்கா அரசு இவற்றை பயன்படுத்தி இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்து வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகிறது. அத்துடன் சர்வதேச சட்டங்கள் எல்லாவற்றையும் மீறிச் செயல்படுகிறது. பொதுமக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவை எதிர்கொள்ள மூளையுள்ளவர் தேவை

### காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை எதிர்கொள்ள வேண்டுமென்றால் பைத்தியத்தனத்தை விட்டு மூளையுள்ளவர்கள் ஒன்றுபடவேண்டும் என்று ஜ.ஐ.தே. முன்னணித் தலைவர் திரு. காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இரத்மலானை ஜ.ஐ.தே. முன்னணியின் மக்கள் சேவை அலுவலகமொன்றை நேற்று முன்தினம் திரு. திஸநாயக்கா திறந்துவைத்து உரையாற்றினார். இதன்போது அவர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்தினால் வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்று கூறினாலும் அதை என்னால் மட்டும் செய்யமுடியாது இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன கைச்சாத்திடும் போது ஒப்பந்தத்தின் ஒவ்வொரு எழுத்துக்குக் கூட ஒத்துழைப்பு வழங்கினேன்.

சகல படைத் தலைவர்களும் மூன்று மாதத்தில் வெற்றிகாண்போம் என்றனர். ஆனால் அந்த வெற்றி எங்கே? இன்று கொப்பேகடுவ எங்கே? அவரைப்போன்றொரு தலைவர் இன்னும் 100 வருடங்கள் சென்றாலும் கிடைக்காது.

தெற்காசியாவில் எந்தப் பிரஜைக்கும் பாதுகாப்புக் கிடைக்காது. ஊழல்களாலும், போதைவஸ்துக் காரர்களாலும் நிறைந்த-எயிட்ஸ் நோய் பரவிய ஒரு நாடாயின் அது இலங்கையே. இதற்கு நாமெல்லோரும் பெறுப்பேற்கவேண்டும்.

லலித் அத்துலத் முதலியின் கொலை பற்றி இரகசியங்கள் உள்ளன. அதை நான் மறைக்க முற்படுவதாயின் அது பெருங்குற்றம். விடுதலைப் புலிகள் மட்டும்தான் இதைச் செய்ததென்று நான் கூறமாட்டேன். பிரேமதாச கொலை பற்றி இன்னும் உண்மை வெளிபாகவில்லை. எஸ்.டி.எவ் ஆட்கள் நூற்றுக்கணக்கில் இருந்த போது ஜனாதிபதியைக் கொலை செய்தால் உங்களின், எங்களின் பாதுகாப்பு என்ன? என வினாவினார்.

### நல்லூர்க் கந்தன் தேர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர் உற்சவம் இன்று காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை காலை 7 மணிக்கு தீர்த்த உற்சவமும் நாளை மறுதினம் மாலை 5 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளன.

## திருமலையில் படையினரால் தந்தையும் மகனும் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகரில் கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளைவானில் வந்தவர்களால் தகப்பனும் மகனுமான இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது தீவிர விசாரணை நடைபெற்றுவருவதால் இவர்கள் விடுவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் வாகன சாரதியான தருமபாலன், அவரது மகன் தயாபரன் ஆகிய இருவருமே இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சிவில் உடையில் வெள்ளை வாகனத்தில் வந்து இவர்கள் ஏற்றப்பட்டனரென்றும் பின்பு வீட்டுக்காரர் படைமுகாம் சென்று விசாரித்தபோது விசாரணை நடப்பதாக தெரிவிக்கப்பட்டதாம்.

## சிப்பாய் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஒருவரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

## 40 பேர் இவ்வாரம் விடுதலை

(வடமராட்சி)

கொழும்பு பல்லேகல முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் சுமார் 40 பேர் இம்மாதம் 20ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளனர். இவர்களில் 25 பேர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள்.

இம்மாதம் 17ஆம் திகதி விடுதலை செய்யப்பட இருந்தபோதிலும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா வெளிநாடு ஒன்றுக்கு சென்றிருப்பதாலேயே இவர்களது விடுதலைக்கு மேலும் மூன்று தினங்கள் தாமதமேற்பட்டுள்ளது. வெளிநாடு சென்றிருந்த பிரிகேடியர் கொழும்பு திரும்பியதும் மேற்படி இளைஞர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

(யோ)

## கல்லடிப் பாலத்தில் புதிய பொலிஸ் முகாம்கள்

மட்டக்களப்பு கல்லடிபாலத்தின் இறக்கத்தில் சிறிலங்கா பொலிசார் புதிதாக முகாம்களையும் காவலரண்களையும் அமைத்துள்ளனர்.

இதனால் இப்பகுதியால் செல்லும் பயணிகள் அனைவரும் பொலிசாரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

### மன்னார் மாவட்டத்தில்

## பல இடங்களிலிருந்து ராணுவம் பின்வாங்கியது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் பல இடங்களிலிருந்து பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

வேக அதிரடி என்ற இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் கடந்த ஒக்டோபர் மாத சிறிலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்திருந்த அடம்பன் முதல் உயிலங்குளம் வரையான பிரதேசத்திலிருந்தே தற்போது பின்வாங்கி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையில் நடைபெற்ற இவ் இராணுவ நடவடிக்கையினால் 2000ற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பத்தாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து மடு, தச்சனா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்டன் மரண வீட்டில் நகைகள் திருட்டு

(கொழும்பு)

மணலாற்றில் இராணுவ முகாம் தாக்குதலின் போது பலியான இராணுவ கப்டன் ஒருவரின் மரணச் சடங்கு நடந்துகொண்டிருந்தபோது அவரின் வீட்டிலிருந்து நகைகள் களவாடப்பட்டுள்ளன.

மேற்படி அதிகாரியின் மரணச் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அவரது மனைவியும், பிள்ளைகளும் சடலத்துடன் இருந்தபோது அவரது வீட்டிலிருந்து 38.000 ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன. இச்சம்பவம் மொறட்டுவவில் இடம்பெற்றுள்ளது.

## வெளி உலக தொடர்பற்று 9 லட்சம் தமிழ் மக்கள்

### வண. ஜெபநேசன் தெரிவிப்பு

சிறிலங்கா படைகளால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ தாக்குதல்களால் 9 லட்சம் தமிழ் மக்கள் வெளி உலகுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இருப்பதாக ஐக்கிய திருச்சபையைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய ஜெபநேசன் ஆண்டகை கூறியதாக அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் சிட்னிமொனி கெரோய்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டிற்கு வெளியே செல்லும் கடல்வழிப் பாதையை சிறிலங்கா படைகள் தடை செய்துள்ளன எனவும் இதனால் பயணம் செய்பவர்கள்மீது சிறிலங்கா ஆயுதப்படைகள் தாக்குதல் நடத்துகிறது எனவும் ஆயுதப் படைகளை எதிர்த்துப் போராடி பயணிகளின் பயணத்திற்கு விடுதலைப்புலிகள் உதவுகின்றனர் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தக் கடல் பயணத்தில் ஈடுபட்ட பல பொதுமக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### காணி விற்பனைக்கு

ஓட்டுமடம், சர்தி அராலி றோட் அலுமினியம் பற்றிக்கு அருகாமையில் 1¼ பரப்புக் காணி வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு J. யேசுதாசன், நம்3, முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(5695)

### தவறிவிட்டது

29 7 93 இரவு அல்லிப்பளை இறங்கு துறையில் இருந்து டஸ் நிலையத்திற்கு செல்லுகையில் பிரயாணப்பை (சொக்கிலேற் நிற கிட்பாக்) தவறிவிட்டது அதனுள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. கிருபாகரன் இல 42, செட்டித்தெரு நல்லூர், யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும்.
(5675)

### சனிநீராடு

உடலுக்குச் சிரசே பிரதானம் கிரமமான எண்ணெய் முழுக்கு உடலைச் சமநிலையில் வைத்திருக்கிறது நமமுன்னோர் பாவித்து வந்த சரக்குகளைக்கொண்டு தாயாரித்த "ஒலிவ் ஸ்நானப்பவுடர் பக்கற்விலை ரூபா. 3/- 25பக்கற் கொண்ட மட்டை ரூ. 60/- "மில்க்வைற்"
(சி-7196)

### ஸ்ரீகாந்த் புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள் ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மற்றாஸ் டிக்செனெறி) சீவப இன்டஸ்றீஸ் வெளியீடுகளும் அருள் உரை ஆகியவை நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை நல்லூர்.
(சி-7134)

### வியாழ மாற்றம் பலன்கள்

ஜோஸ்யர் முத்திரை. சிறுவர்களுக்கு அறிவு நூல், கல்வியல் புலத்துக்கு ஆய்வு நூல், பாமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலன்கள், வியாபாரிகளுக்கு சழிவுண்டு. ஸ்ரீகாந்த்புத்தகசாலை நல்


இடைநிறுத்தம் செய்யப்பட்ட

## பல்கலை மாணவருக்கு 3 இலட்சம் நட்டஈடு

[கண்டி]

பேராதனைப் பல்கலைக் கழகத்திடமிருந்து 3,00 000 ரூபா நட்டஈடு கோரிப் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் தாக்கல் செய்த வழக்கில் நஷ்டஈட்டை வழங்குமாறு கண்டி மாவட்ட நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

பல்கலைக்கழகத்திலிருந்து மூன்று வருடங்கள் தன்னை இடைநிறுத்தி வைத்ததால் இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை என்று முன்னாள் மாணவர் சரத்பெரேரா நாணயக்கார தனது மனுவில் தெரியப்படுத்தியுள்ளார்.

ஆங்கில மொழிமூலம் கல்வி கற்ற மாணவராகிய இவர் பட்டதாரி இறுதியாண்டுப் பரீட்சைக்கு 1983 ஜூலையில் தோற்றவிருந்தார். ஆனால் உடலகம ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி சம்பந்தப்பட்ட மாணவர் ஜூலை முதலாம் திகதியன்று பல்கலைக்கழகத்திலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டார்.

மேல்முறையீட்டு மன்று மாணவர் சரத்பெரேராவின் மனுவை விசாரித்து அவரை மீளவும் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கும்படி பணித்தது 1986 இல் அனுமதிக்கப்பட்ட அந்த மாணவர் அதே ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றிப் பரீட்சையில் சித்தியடையவில்லை மூன்று வருடங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டதேதான் பரீட்சையில் சித்தி அடையாததற்கான காரணம் என்று மனுவில் காட்டப்பட்டது. இதனை அடுத்து 3,00 000 ரூபா நஷ்டஈடும் செலவுத் தொகையும் வழங்கும்படி நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.


## விசேட பஸ்சேவை

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு தேர், தீர்த்தம் ஆகிய திங்கள், செவ்வாய் இரு நாட்களும பளை, கொடிகாமம், சாவகச்சேரியிலிருந்து சிற்றூர்தி சேவை நடைபெறும்.

பூங்காவன தினமான புதன்கிழமை மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து இலவச போக்குவரத்து சேவை நடைபெறுமெனவும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகிகள்,
சிற்றூர்திச் சேவை ஒன்றியம்
தென்மராட்சி.

(5693)

தமிழீழ வளங்கள் பெருகிடவும்
சுதந்திரம் மலர்ந்திடவும்
தேரேறும் நல்லூரான் அருள் நாடும்

**எழிலகம்**

வாடிக்கையாளர் வசதிகருதி சீரமைக்கப்பட்ட புதியபொலிவுடன் உங்களை அழைக்கின்றது.

சிறுவருக்கான
விளையாட்டுப் பொருள்கள் பரிசுப் பொருள்கள்

மாணவருக்கேற்ற
உபகரணங்கள் சீருடை வகைகள்


## அரிக்கன் லாம்புடன் அம்புலன்ஸ் சேவை

(நெல்லியடி)

வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிக்குரிய பற்றறியை அனுப்ப கொழும்பு கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதிவழங்காதமையினால், மந்திகையிலிருந்து அவசர நோயாளிகளைஏற்றிக் கொண்டு யாழ். போதனாவைத்தியசாலைக்கு சென்ற அம்புலன்ஸ் வண்டி அரிக்கன்லாம்பு வெளிச்சத்துடன் சுமார் 2 மணித்தியால பிரயாணத்தில் யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்த சம்பவம் கடந்த வெள்ளிமாலை இடம்பெற்றது.

அவசர நோயாளிகளின் உயிராபத்தை நீக்கும் வகையில் சேவை செய்யும் வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி இவ்விதம் சேவை செய்வதனால், கொண்டு செல்லப்படும் அவசர நோயாளிகள் உயிர் பிரியும் வாய்ப்பும் ஏற்படலாமென வைத்தியசாலை வட்டாரங்கள், எமது நெல்லியடி செய்தியாளர் திரு. இ. கிருபாகரசூரியனுக்கு தெரிவித்தனர்.
(30)

## காமினியை இணைக்க விஜேதுங்கா முடிவு?

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்காவின் புதிய அமைச்சரவையில் நிதி அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் நியமிக்கப்படாமை அப் பதவி காமினி திசநாயக்காவிற்கு கிடைக்கலாம்என்ற ஊகத்தை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது என பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இதற்காகவே இவ்விரு பதவிகளும் வெற்றிடமாக வைத்திருப்பதாகவும் ஜனாதிபதி காமினி திசநாயககாவை கட்சியில் இணைப்பதற்கு முடிவு செய்துள்ளார் என்பதையே காட்டுகிறது என அது மேலும் தெரிவித்தது.

இதேவேளை இந்த நடவடிக்கை கட்சிக்குள் பெரும் எதிர்ப்பை உண்டாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவ அதிகாரிகளும் நிராகரித்தனர்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு ஐ. நா. தலையீட்டுடன் தீர்வுகாணுமாறு நோபல் பரிசு பெற்ற நால்வர் சமர்ப்பித்த யோசனையை சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

இப்பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகளின் சமாதானப்படை ஒன்றை அழைக்கவேண்டும் என்ற யோசனையை சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்ததை இராணுவ உயரதிகாரிகள் வரவேற்றனர்.

## இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே அவசியம்

### சிறுவர் பாடசாலை திறப்பில் உரை

(கொழும்பு)

இந்த நாட்டின் முக்கிய பிரச்சினை வடக்கு கிழக்கு பிரச்சினையாகும் இப்பிரச்சினையை தர்ம உபதேசம் செய்தோ பைபிளைப் பிரட்டியோ தீர்க்க முடியாது இப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே காண வேண்டும். இவ்வாறு சிறிலங்கா மகாபோதி சங்க தலைவரான காமினி ஜெயசூரியா கொடக்காவல மகிந்தராம விகாரையில் புதிய சிறுவர் பாடசாலை ஒன்றை திறந்து வைத்து பேசுகையில் தெரிவித்தார்.

ஒருமுறை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வடக்கு கிழக்கு பயங்கரவாதப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே பரிகாரம் எனக் கூறியிருந்தார் நானும் அவரின் கூற்றுக்கு மகிழ்ச்சி தெரிவித்து அவசர தந்தி ஒன்றை அனுப்பினேன். இன்று யாழ்ப்பாணத்தில் அரசின் நிர்வாகம் இல்லை யாழ்ப்பாண அரச அதிபர் என்ன

### கோரிக்கை

(பருத்தித்துறை)

"கிராம உத்தியோகத்தர் தரம் 1க்கு பதவி உயர்வு வழங்கலுக்கான பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள அதேவேளையில் சேவை மூப்பு அடிப்படையில் கிராம உத்தியோகத்தர் தரம் 1க்கு குறிப்பிட்டவிதத்தினரை பதவி உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்"

யாழ். மாவட்ட கிராம


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**கப்டன் நக்கீரன்/மாமா**
[இராசையா யோகராசா]
பிள்ளையார் கோவிலடி, மயிலிட்டி.

| மண்ணிற்காய் | மாவீரனாய் |
| --- | --- |
| 11-1-1965 | 18-7-1993 |

சென்றாய் நீ மண்ணை மீட்க - வந்து
நின்றாய் எம நெஞ்சம் பூர்க்க - புலி
உடுப்பில் உன்னைக் காணும்போது புகழ்ந்து நின்றோமே
பந்த பாசங்கள் துறந்தங்கே
பாசறை வந்தவர்க்கு - தம்பி
பிரபா படையில் பயிற்சியாளன் ஆக ஆனாயே
கடமை உன்னது பேசே கடமை என்றால் நீயே
உயிரை மதியாது உழைத்து முடித்தாயே
பாதியிலே பயணம் முடித்து மாவீரன் ஆனாயோ

17-8-93 செவ்வாய் (நாளை) நடைபெறும் எனது மகனின் நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் போராளிகள் உற்றார், உறவினர் நண்பர்கள் மயிலிட்டி கடற்தொழிலாளர் ஒன்றியம் ஆகிய எல்லோரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இராசையா இராக்கினி அம்மா
குடும்பத்தினர்.
நாகர் கோவில் வடக்கு
நாகர்கோவில்.
(5098)

## 31-ம் நாள் நினைவஞ்சலி 16.08.1993



தோற்றம்
10-4-1925

மறைவு
17-07.1998

னெறிகள், இலங்கை வெளி யீடுகள் ஆங்கில தமிழ் சொற் களஞ்சியம். (மற்றாஸ் டிக் செமனறி சீவப இன்டஸ்றீஸ் வெளியீடுகளும் அருள் உரை ஆசியவை நல்லூர் உற்ச வத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை நல்லூர்
(சி-7134)

## வியாழ மாற்றம் பலன்கள்

ஜோஸ்யர் முத்திரை. சிறு வர்களுக்கு அறிவு நூல், கல் வியல் புலவர்களுக்கு ஆய்வு நூல், பாமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலன்கள், வியாபாரிகளுக்கு கழிவுண்டு. ஸ்ரீகாந்த்புத்தகசாலை நல் லூர், மகமிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம் (சி-7184)

## றேடியோ, மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வைண்டிங்கடிகாரங்கள்90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங் கள் 125/-எலெக்ரோனிக் கடி காரங்கள் 90/-, 150/- மேசை சுவர் மணிக்கூடுகள் 100—200 றேடியோ மட்டும் 150/-.கசற் றேடியோ 200/- இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி யாழ்ப் பாணம் (சி-7113)

## எம். ஜி. ஆர் திருமண சேவை

எல்லா இனத்தவர்களின் மணமகன் மணமகள் எம்மிடம் நிறைய உண்டு தொடர்பு. வே புண்ணியமூர்த்தி அனுமதி இலக்கம்: 251 8புத்தூர் சந்தி. மீசாலை. (5089)

## காணவில்லை

வெள்ளைநிறபொப்பேரியன் ஆண் நாய் கடந்த வெள்ளிக் கிழமை தொடக்கம் காண வில்லை. பிடித்து தருபவருக்கு சன்மானம் தரப்படும்.
R S K FARM, MURUCA-PATHY, UDUVIL. (5699)

## மட்டு வாவியில் மீன் பிடிக்க தடை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வாவியின் சில பகுதிகளில் மீன் பிடிக்க தொடர்ந்து தடைவிதிக்கப் பட்டுள்ளதால் அங்குள்ள மீனவர்கள் வருமானமின்றி கஷ்டமுறுகின்றனர்.

புதூர், வீச்சுக்கல்முனை, பெரியதுறை உட்பட படுவான் கரையின் சில பகுதிகளில் வாவியில் மீன்பிடிப்பது தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி.

(5693)

தமிழீழ வளங்கள் பெருகிடவும்
சுதந்திரம் மலர்ந்திடவும்
தேரேறும் நல்லூரான் அருள் நாடும்

## எழிலகம்

வாடிக்கையாளர் வசதிகருதி சீரமைக்கப்பட்ட புதியபொலிவுடன் உங்களை அழைக்கின்றது.

சிறுவருக்கான
- விளையாட்டுப் பொருள்கள்
- பரிசுப் பொருள்கள்

மாணவருக்கேற்ற
- உபகரணங்கள்
- சீருடை வகைகள்

யாவரும் விரும்பும்
- புடைவை வகைகள்
- அழகியல் சாதனங்கள்
- மின் உபகரணங்கள்
- பாத்திர வகைகள்
- ஆலய உபகரணங்கள்
- வைபவங்களிற்கேற்ற பரிசுப் பொருள்கள்
- மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள்

குறைந்த விலை! நிறைந்த சேவை!!

எதற்கும் என்றும் புத்திசாலிகளின் தேர்வு

# எழிலகம்

மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: வெளிநாட்டு நாணயங்கள் மாற்றிக்கொடுக்கப்படும்.

(சி-7202)

இந்த நாட்டின் முக்கிய பிரச்சினை வடக்கு கிழக்கு பிரச்சினையாகும் இப்பிரச்சினையை தர்ம உபதேசம் செய்தோ பைபிளைப் பிரட்டியோ தீர்க்க இராணுவத் தீர்வே காண வேண்டும். இவ்வாறு சிறி லங்கா மகாபோதி சங்க தலை வரான காமினி ஜெயசூரியா கொடக்காவல மகிநதராம விகாரையில் புதிய சிறுவர் பாடசாலை ஒன்றை திறந்து வைத்து பேசுகையில் தெரிவித் தார்.

ஒருமுறை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க வடக்கு கிழக்கு பயங்கரவாதப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே பரி காரம் எனக் கூறியிருந்தார் நானும் அவரின் கூற்றுக்கு மகி ழ்ச்சி தெரிவித்து அவசர தந்தி ஒன்றை அனுப்பினேன். இன்று யாழ்ப்பாணத்தில் அர சின் நிர்வாகம் இல்லை யாழ்ப் பாண அரச அதிபர் என்ன செய்கின்றார்? வடக்கில் 40 வீதமான பகுதிகள் புலிகளிடம் உள்ளது என்றும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

## கோரிக்கை

(பருத்தித்துறை)

''கிராம உத்தியோகத்தர் தரம்1க்கு பதவி உயர்வு வழங் கலுக்கான பரீட்சைக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ள அதேவேளையில் சேவை மூப்பு அடிப்படையில் கிராம உத்தி யோகத்தர் தரம் 1க்கு குறிப் பிட்டவிதத்தினரை பதவி உயர்த்துவதற்கான நடவடிக் கைகளை உடனடியாக மேற் கொள்ள வேண்டும்''

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கம் சம்பந்தப் பட்ட அமைச்சுகளிடம் மேற் குறிப்பிட்ட கோரிக்கையை விடுத்துள்ளது. (25)

# மனைவியின் சடலத்தைகூட காணமுடியாமற் போனது

### விடுவிக்கப்பட்டவர் கவலை

[நெல்லியடி]

பலாலி முகாமை அண்டிய பகுதிகளில் இருக்கும் வீடுக ளுக்குச் சென்று வரும் இரா ணுவத்தினர் அங்கிருந்து கூறைச் சேலைகள் எவர் சில் வர் பாத்திரங்கள், ரீவி, டெக், வானொலி போன்றவற்றை சேகரித்துக் கொண்டு வந்து தமக்குரிய அறைகளில், வைத் திருப்பதை என்னால் காண முடிந்தது.

ஆவ்வாறு கடந்த மாதம் 29ம் திகதி கிளாலி கடலில் ஸ்ரீலங்கா கடற்படைத் தாக் குதலில் அகப்பட்டு கைது செய்யப்பட்டு சென்ற 5பேர் களில் ஒருவரான பருத்தித் துறை துமபளையைச் சேர்ந்த வரும், முன்னாள் இந்தியன் வங்கி கொழும்புக்கிளையின் உதவி முகாமையாளருமான திரு. இராமு சிவஞானசுந் தரம் (வயது61) தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் அங்கு சில வருடங் களுக்கு முன்னர் கைது செய் யபபட்ட பல தமிழ் கைதிகள் பாதுகாப்பில் இருக்கிறார்க ளென்றும், தான் தனது மனைவியின் மரணக்கிரி யைக்கு வந்து படையினரின் கையில அகப்பட்டு, கைதியா கியதனால், உயிரற்ற மனை வியின் சடலத்தைக் கூடகாண முடியாது போய் விட்டதென விம்மி விம்மி அழுதார்.

(30)

## பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

(தேசிய பயிலுநர் சபையு டன் இணைந்து யாழ் மாநகர சுகாதார பகுதியினர் நடத்த வுள்ள குடும்பநல உதவியாளர் பயிற்சியில் சேர விரும்பும் பெண்சுகாதாரத் தொண்டர் களாக இருந்தவர்கள் நாளை 17 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்பாக கண்டிவீதி யிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வரு மாறு வேண்டப்பட்டுள்ளனர். பயிற்சியாளர்கள் 18வயதுக்கும் 25வயதுக்கும் இடைப்பட்டவர் களாகவும்க பொ தசாதாரண தர பரீட்சையில் ஆறு பாடங் களில் சித்தியும் அடைந்தவ ராகவும் இருத்தல் வேண்டும்.

தேரேறும் நல்லூர் கந்தன் யாவருக்கும் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்
ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள்
சைவ, அசைவ கீழைத்தேச மேலைத்தேச
உணவு வகைகள் சிற்றுண்டி வகைகள்
சுவைமிகுந்த பாண் வகை தயாரிப்புக்கள்
வைபவங்களிற்கு
மன நிறை பரிமாறு சேவை
தூரம், நேரம், தொகை எமக்கு தடையல்ல
**சுவை! தரம்!! சுகாதாரம்!!!**

ஒருங்கிணைந்த

# சுவையருவி

**மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.** **பேருந்து நிலையம் நெல்லியடி.**

குறிப்பு: சைவ, அசைவ உணவு வகைகள் வெவ்வேறு சமையலறைகளில் தயாரிக்கப் பட்டு தனித்தனி பகுதிகளில் பரிமாறப்படுகின்றது.

(சி-7203)

## 31-ம் நாள் நினைவஞ்சலி 16.08.1993



தோற்றம்
1[illegible]-4-1925

மறைவு
17-07.1998

## சின்னத்தம்பி ஆறுமுகம்

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் எங்களை எல்லாம் வழி நடத்தி நல்வழிகாட்டிய அன்புத் தெய்வமே எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மனதில் அணையாத தீபமாக இருந்து கொண்டே இருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டு கின்றோம்.

ஆ. தர்மகுலசிங்கம்
15/12, புவனேஸ்வரி அம்மாள் வீதி,
நல்லூர் கிழக்கு.
(5696)

அன்பு மனைவி,
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# நினைவு கூருகின்றோம்... 1993-08-16

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1985ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்கா இராணு வத்தினரால் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு மட்டு-குடியிருப்புப் பகுதியில் இந் தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மூர்த்தி** (வேதாரணி சத்தியமூர்த்தி-நல்லதம்பியார்வீதி, ஏறாவூர்-மட்டு)

திருமலையில் சிறிலங்கா காவல்துறையினர் மற்றும் கடற்படையினரால்சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு முள்ளிப்பள்ளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய் திய.

**ராஜன்** (— — திருமலை)

யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்கு தல்களில் கொல்லப்பட்ட கல்வியங்காட்டைச் சேர்ந்த தமிழிளைஞன். மற்றும் நில அளவையாளரான தமிழ்ப் பொதுமகன்.

1992ஆம் ஆண்டு ஊரியானில் சிறிலங்கா இராணு வத்தினரின் திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2 ம் லெப். ராசன்** (இராமநாதன் பத்மநாதன்- 115-ம் கட்டை கிளிநொச்சி)

**வெங்கடேஸ்வரன்** (சின்னையா ராமநாதன்-ஊற்றுப்புலம் முறிப்பு-கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி 7194)

நல்லூர் இன நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# நல்லூர் கந்தன் இரதோற்சவம்

## சிறப்பிதழ் 1993

## நல்லைக் கந்தனின் அற்புதங்கள்

தமிழரசர்களின் இராச தானியாய நல்லூரிலே குன்று தோராடு குமரப் பெருமானாய கந்தன் கோயில்கொண்டெழுந்தருளி அன்பர்கள், அடியார்கள், ஞானியர், யோகியர் பலரையும் ஆட்கொண்டருளி, அற்புதங்கள் செய்து, தீரா நோய்கள் தீர்த்து தம் திருவடியின்பம் நல்கிய வரலாறுகள் மிகப்பல.

அவை யாவும் அதியற்புதமான அருட்செயல்களாகும். அற்புதங்களும், அருட்செயல்களும் அவரவர் பக்குவத்துக்கமையப் பாலித்தருளப் பெறுவனவாகையால் அவற்றை நாம் தொகுத்துக் கூறுதல் மிகக் கடினமான செய் கருமமாகும்.

''செந்தாதிறைக்கு மலர்த்தேம் பொழில் சூழ் நல்லை வரு கந்தா'' ''உனது கழலிணைக் கீழ் இருக்கும் சுகந்தா'' எனப் பாடியவர்களும் ''தூய செந்தாமரைப் பாதமென் சிரசிலும் சூடநீ தருவதெந்நாள்' எனறு நெஞ்சுருகிப் பாடுபவரும். ''நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனத்தோடு நாம் பணிந்தால்- நல்ல மயில் ஏறி வந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன் தேறிவிடும் சிந்தை தெளி'' என்று ஆற்றுப்படை பாடி வழிகாட்டியருளிய யோகியரும், ''தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி வழியுமே'' என்று வாழ்த்தியவரும், ''மருந்தும் மணி மந்திரமும் பிணி மிடி மாற்றுவதற்கு அருந்தும் விருந்தும் இரவும் பகலும அருள் துணையும் திருந்தும முருகன் திருநாமம் என்றினித் தேறிவிட்டேன் வருந்துந் துயரறுக்கும் நல்லையைக் குமபட்ட மாத்திரையே'' என்றுருகிய புலவர்களும் நல்லூர்க் கந்தன் தேரில் வரும் காட்சியைக் கண்டுருகி. பல்லூரவரும் பரவும் பல்லலங்காரமுடன் நல்லூரிரதம் வரும் காட்சி காண்பவர் ஞானிகளே'' எனக் கண்டவர்களும், ''மண்ணிற் பிறப்பவர் வேண்டும் வரங்கள் மலர்ந்தளிக்க எண்ணிய பேற் பெருமானுறை கோவிலிதுவெனவே கண்ணிற் கழகு தரும் கோபுரமும் கண்மணியும் விண்ணுக் குணர்த்து நல்லைப் பதிகாண விரைமனமே' என்று ஆர்வமுடடும் அல்வாயூர்க் கவியும் பிறர் பலரும் அருள் பெற்ற அற்புதங்கள் மிகப் பலவாகும்.

நல்லூர்க் கந்தனின் அற்புதங்களைப் படம் பிடித்துக் காட்டுவதற்குக் கருவிகள் கிடையா. ஆனால் கந்தனின் அற்புதங்களில் அறநனைந்த ஞானியர், யோகியர் பாடல்கள் நல்லூரையும் நனைத்து, நமது இதயங்களையும் நனைத்துள்ளன. இன்னும் அருள் பெற்ற புலவர்கள் பலர் பாடிய பாடல்கள் பல பக்தி இலக்கியப் பரப்பை அகலித்துள்ளன. அவை கவிதை மாரியெனப் போற்றுதற்குரியவை.

''விந்தை செறி நல்லூர் விரும்பியுங் கந்தன்'', 'கோபுரம் தரிசித்தேன், கும்பிட்டேன், வீதி வலமாய் வந்தேன். நாவினால் போற்றி செய்தேன்'' என்கிறார் ஒருவர். இன்னொருவர் தேரேறு கெருவெலாம் அன்பர் கண்ணீரினால் 'சேறேறக்' கண்டு பாடினார். இன்னொருவர் ''அருளினால் பக்குவான்மாக்கட்கு முத்தி அருள் சுந்தர வடிவு'' கண்டார். இன்னொருவர், ''பார்மேவு தொண்டர் பழவினை தீர்த்தாண்டருளும் சீர்மேவு நல்லை நகர் செவ்வேள்'' பெருமானைக் காட்டுகிறார்.

இன்னும் இவ்வாறாக கவி மாரி பொழிந்தவர்கள் ''பேர் உரைத்தவர் பேறுபெறுவர்'' என்றும், ''நல்லூரில் தேரடியில் நான் கண்டு போற்றிசைத்தேன். சொல்லு நரமோ சுகம்'' என்றும் பாடுவர்.

தேரடியில் நின்று தரிசித்தால் போதும் என்று பொன் மனம் படைத்த யோககுரு சுவாமிகள் தாம் தேரடியிலேயே ஆட்பட்ட சம்பவத்தைப் பல இடங்களில் பாடியருளியுள்ளார்.

''நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி கிளியே இரவுபகல் காணேனடி'' என்றும், ''பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தா

(4 ஆம் பக்கம் பார்க்க)



### யாழ்.மாநகர ஆணையாளர் அவர்களின்

### வாழ்த்து

ஈழவள நாட்டில் வாழும் சைவமக்கள் நெக்குருகித் துதிக்கின்ற நல்லைக்கந்தன் தேரேறிவருகின்ற மகோன்னதமான இவ்விழாவினை ஒட்டி, ஈழநாதம் பத்திரிகையினர் சிறப்புமலர் ஒன்றினை வெளியிடுவது பாராட்டுக்கும் பெருமைக்குமுரிய விடயமாகும்.

நல்லை நன்னகரிலே மஞ்சுதமிழ்மாடக்கோபுரங்கள் மணிக்கோபுரங்கள் மகரதோரண வாயில்கள்- தெப்பக்குளம்,தேரோடுப் வீதிகள்புதுப்பொலிவுடன்புதுமெருகுடன் தரும்மாட்சிகண்கொள்ளாக்காட்சியாகஇலங்கும் அந்தந்த வேளைகளில் ஆலய மணியோசை கணீர், கணீர் என்று ஒலிக்கும். அவ்வொலியோசை பெருமானுக்கு 'ஓம்' 'ஓம்' என்று ஓங்காரவொலிபரப்பி நிற்கும். இருபத்திநான்காம் நாள் நடைபெறும் தேர் உற்சவத்தை நாட்டின் நாலாபக்கங்களிலுமிருந்து பக்த கோடிகள் நல்லூரை நாடி வந்து பங்கு கொண்டு குமரன் அருள் பெற்றுய்வர்

இன்னல் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் எமது மக்கள் உள்ளங்களிலேயே மேலோங்கி நிற்கின்ற தெய்வ உணர்வானது எம்மைச் சூழ்ந்திருக்கும் துன்பமெல்லாம் நீங்கி அனைவரும் மனநிறைவோடும், நிம்மதியோடும், புகழ்பூத்தும் வாழுகின்ற ஒரு நல்ல ''நாளையே'' தேரேறிவரும் வேலவன ஈய்ந்தருளச்செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

''எத்தொழிலைச் செய்தாலும்,
ஏதவதைப்பட்டாலும்
கந்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடடி''.
—யோகர் சுவாமிகள்

வே. பொ. பாலசிங்கம்;

### இறைவணக்கம் அமைதிதரும்

பழம் பெரும் முருகன் ஆலயங்களைக் கொண்ட பெருமை எம் நாட்டிற்கு உண்டு இன்று நல்லூர்க் கந்த சுவாமி கோயில் குறிப்பிட்ட ஒரு பிரதேச மக்களுக்கென்று இல்லாமல் நாடு முழுவதிலும் வாழும் சைவ மக்களுக்கு உரிய ஆலயமாக விளங்குகின்றது.

வரலாற்றுப் பெருமை வாய்ந்த நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது என்பதில் நாமெல்லோரும் பெரு மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறோம். துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் வாழும் எமக்கு இன்று ஓரளவுமனச் சாநதி தருவது ஆலய வழிபாடாகும். முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மக்கள் ஆலய உற்சவங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து தம் மனச்சுமையை ஓரளவு குறைத்து, இறையருள் வேண்டி நிற்பதை இன்று நாம் காணமுடிகின்றது. இன்று அலங்கார மூத்துக் குமார சுவாமியாக தேரினில் பவனிவரும் எம் கந்தப்பெருமானின் பேரருளைப் பெற்று நாம் உய்வோமாக.

நல்லூர் ஆலயப் பிரதேசம் ஒரு புனிதநகராக விருத்தி செய்யப்பட்டு எமது வரலாற்று, கலாசார பாரம்பரியத்தை எடுத்தியம்பும் இடமாக என்றென்றும் அமைய வேண்டும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
பதில் துணை வேந்தர்

### சித்திரத் தேர்தனில் வருவாய் அருள்தரவே!

வடபால் திசையில்
நல்லூரான் திருவடி நிழல்-தன்னில்
அருள்பாலிக்கும் வடிவேலன்
நல்லூர்க் கந்தனே;
ஈர்பன்னிரு நாட்களில்
முருகன் திரு அருள்பாலிக்க
சித்திரத்தேர் - தன்னில்
கொடியோர் பகை - அறுக்க
வீதியுலா வரும் காட்சி
தமிழீழத் திசையெங்கும்
வினை தீர்த்தெழவே;
நான்கெழுத்து
நல்லூர் தனில் குடியாகவே
குடியேறிய குமரா
நாற்றிசையும் அருள்
பாலிக்கும் வெற்றி
வேலவனே திருமுருகா!

நவாலியூர், எஸ். ரமேஷ்

மக்கள் நலம் பெற
கந்தன் கருணையை வேண்டுவோம்.
ஜெயா அழகு சாதன மாளிகை
177A மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பிளாஸ்ரிக், அலுமினிய
பாத்திரங்களைவிற்பனை
செய்யும் முன்னணி
நிறுவனம்,

நீங்கி அனைவரும் மனநிறைவோடும், நிம்மதியோடும், புளழ்பூத்தும் வாழுகின்ற ஒரு நல்ல ''நாளையே'' தேரே றிவரும வேலவன ஈய்ந்தருளச்செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

''எத்தொழிலைச் செய்தாலும்,
ஏதவதைப்பட்டாலும்
கந்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடடி''.
—யோகர் சுவாமிகள்

வே. பொ. பாலசிங்கம்,

யூர்க் கவியும் பிறர் பலரும் அருள் பெற்ற அற்புதங்கள் மிகப் பலவாகும்.

நல்லூர்க் கந்தனின் அற்புதங்களைப் படம் பிடித்துக் காட்டுவதற்குக் கருவிகள் கிடையா. ஆனால் கந்தனின் அற்புதங்களில் அறநனைந்த ஞானியர், யோகியர் பாடல்கள் நல்லூரையும் நனைத்து, துள்ளன. அவை கவிதை மாரி யெனப் போற்றுதற்குரியவை.

''விந்தை செறி நல்லூர் விரும்பியுங் கந்தன்'', 'கோபுரம் தரிசித்தேன், கும்பிட்டேன், வீதி வலமாய் வந்தேன். நாவினால் போற்றி செய்தேன்'' என்கிறார் ஒருவர். இன்னொருவர் தேரேறு கெருவெலாம் அன்பர் கண்ணீரினால் 'சேறேறக்' கண்டு பழவினை தீர்த்தாண்டருளும் சீர்மேவு நல்லை நகர் செவ்வேள்'' பெருமானைக் காட்டுகிறார்.

இன்னும் இவ்வாறாக கவிமாரி பொழிந்தவர்கள் ''பேர் உரைத்தவர் பேறுபெறுவர்'' என்றும், ''நல்லூரில் தேரடியில் நான் கண்டு போற்றிசைத்தேன். சொல்லு நகரமோ சுகம்'' என்றும் பாடுவர்.

தேரடியில் நின்று தரிசித்தால் போதும் என்று பொன்

வடபால் திசையில்
நல்லூரான் திருவடி நிழல்-தன்னில்
அருள்பாலிக்கும் வடிவேலன்
நல்லூர்க் கந்தனே;
ஈர்பன்னிரு நாட்களில்
முருகன் திரு அருள்பாலிக்க
சித்திரத்தேர் - தன்னில்
கொடியோர் பகை - அறுக்க
வீதியுலா வரும் காட்சி
தமிழீழத் திசையெங்கும்
வினை தீர்த்தெழவே;
நான்கெழுத்து
நல்லூர் தனில் குடியாகவே
குடியேறிய குமரா
நாற்றிசையும் அருள்
பாலிக்கும் வெற்றி
வேலவனே திருமுருகா!

நவாலியூர், எஸ். ரமேஷ்


மக்கள் நலம் பெற
கந்தன் கருணையை வேண்டுவோம்.

**ஜெயா அழகு சாதன மாளிகை**
177A மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**ஜெயா பென்ஷி ஹவுஸ்**
160, நவீனசந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

**ரேகா அழகு சாதன விற்பனை நிலையம்**
25, 48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

வெளிநாட்டு உள்நாட்டு அழகுசாதனப் பொருட்களை நிதானவிலைக்கு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பிளாஸ்ரிக், அலுமினிய பாத்திரங்களைவிற்பனை செய்யும் முன்னணி நிறுவனம்,

*

**ஸ்ரீராம் விற்பனை நிலையம்**

*

இல. 326,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

சிங்காரத் தேரேறி
சிறப்புடனே வலம் முருகனே
பக்தர்களின் குறைதீர்க்க பறந்தோடி வாராயே

**''குணம் வீடியோசென்ரர்''**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

இருமனம் கலந்தால் நிகழ்வது?
திருமணம். திருமணம் என்பது
சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது
திருமணப் புடைவைத் தெரிவுகள்
பூவுலகில் என்றால் மணமக்கள்
மனம் மகிழும் மங்கலமான கூறைச்
சேலைகட்கு - நகரின் மத்தியில்
நல்ல ராசியான நிறுவனம் —

லலிதா புடைவை மாளிகை

திருமணப் பெண்ணை தேவதை
ஆக்கிடும் பட்டுப்புடைவைகள், மண
மகன் மனம் மகிழும் பட்டுவேட்டிகள்
இந்து கிறீஸ்தவ மக்களின் திருமணப்
புடைவைத் தெரிவுகட்கு இன்று
அனைவரும் நாடுமிடம் —

லலிதா புடைவை மாளிகை

எந்தெந்த ரகங்களில் கூறைச்சேலைகள்
வேண்டுமோ அவரவர் வசதிக்கேற்ப
ரசனைக்கேற்ப தேர்வு கண்டு தெரிவு
செய்திட —

லலிதா புடைவை மாளிகை

திருமணப் புடைவைகள், சேட்டிங்,
சூட்டிங் தினுசுகள் ஸ்கேட் அன்
பிளவுஸ், Tசேட் ரகங்கள் அனைத்துப்
புடைவைகட்கும் —

லிலதா புடைவை மாளிகை

வண்ணத் தேரேறி வள்ளி தெய்வயானையுடன் வீதி வலம் வரும் வேலவன் கோடி
துயர் சுமந்து உனை நாடி வரும் அடியவரின் கொடிய வினைதீர்த்திடுவாய்.
எம் தமிழ் இனம் வாழ அருள்புரிவாய்

# லலிதா புடைவை மாளிகை

5, 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

நல்லூரான் வீதி
நடந்தார் குறை தீரும்
நம்பித் தொழுவோம்
நலம் பெறுவோம்
எந்நாளும்.

தேரேறும்குமரனை
நாம் சிரம் தாழ்த்தி
வணங்குகிறோம.

*

**ரேடியோஸ் பதி**

யாழ்ப்பாணம்.

யாழ் புகைப்படத்துறையில்
புதிய அத்தியாயம்!!!!
ஸ்டுடியோ ஒழுங்கமைப்பில்
உங்கள் மங்கள வைபவங்களை
கண்ணைக் கவரும்
வண்ணப்படங்களாகபெற்றுக்கொள்ள

**- இது ஒரு சிறப்புச்சேவை -**

**கே.எஸ். ஆர். போட்டோஸ்**
இல. 766 கே கே எஸ். வீதி,
தட்டா தெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

சிறப்பிதழ் ஆக்கம், அழகு
செல்வராஜா சுரேஷ்
(விளம்பர சேகரிப்பாளர் மானிப்பாய் பிரதேச செய்தியாளர்)

**நாட்டில் சமாதானம் நிலவ நல்லூர்க் குமரன் அருள் வேண்டுவோம்**

அழகிற்கு அழகு செய்யும் அழகிய
**தங்கப்பவுண்** நகைகளுக்கு

# நதியா ஜுவல்லறி

[ஸ்ரான்லி வீதிச் சந்தி]

**2, கஸ்தூரியார்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## நல்லைக் கந்தனின்..

லும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி'' என்றும்,

''கண்டாயோ கார்மயிலே கந்தன் விளையாட்டுக்களை மண்டலங்கள் நடுங்குபடி. மணியோசை கேட்குதடி'' என்றும் பாடியருளுவர். இவ்வாறு முன்னர் திருமுருகனிடம் பக்தர்களை ஆற்றுப்படுத்திய நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையின் இறுதியில் வரும் ''அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்'' என்று பாடியவை நினைவுக்கு வரும். அஞ்சாதே என்று அபயகரம் காட்டியருளும் கந்தனின் அருள் வாசகம் ''நாமிருக்கப் பயமேன்'' என்றவாறுகாண்க.

இவ்வாறெல்லாம் பூமிசைப் பொலி புண்ணியா போற்றிய நாம வேற்கரநாதன் ''வேலனாய கந்தனேயாவன், அவனே நல்லூர் நாதன், நல்லூர் முருகனையே நாடு'' என்று வாய்மொழியாக எல்லோரும் கூறுவர்.

''வாடு நெஞ்ச மயக்கம் அறுத்தவர் நாடு மெய்க்குருநாதன் அருள்பெறக் கேடில் செல்வமும், கீர்த்தியும் மிக்குறத் தேடி நல்லைச் செழும்பதி சேர்மினே'' என்று வழிகாட்டுகிறார் ஒருவர். இவர் காட்டிய வழிசென்று பணிந்து முருகனடியாரான உங்களை வாழ்த்துகின்றார் பெருநாவலரான எங்கள் சைவப் பிரசாரகர்.

''தருணம் இது என அமரர் பணி நல்லையமர் கந்கர் தமது அடியர் நிதமும் வாழி.''

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் என்று சிவயோக சுவாமிகள் போற்றும் கந்தனாலயத்தில் கடுந்தவம் செய்த செல்லப்பா சுவாமிகள், திருக்கோயிலின் அர்த்தசாமப்பூசை நிறைவேறி ஆரவாரம் அடங்கிய பின் மெதுவாகத் தேரடியைவிட்டு எழுந்து கோபுர வாசலில் அமர்ந்து முருகப் பெருமானோடு உரையாடி கேட்ட மகாமந்திர வாசகங்களே இன்று எல்லோர் மனத்திலும் ஏறிவிளையாடுகின்றன.

''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்; நாமென்றும் அறியோம்; யாரறிவார்; முழுதும் உண்மை; ஒரு பொல்லாப்பும் இல்லை''

இவ்வாசகங்களே யோக சுவாமிகளின் ஆயிரக்கணக்கான அமுத வாசகங்களின் உயிர்நாடிகளாக உள்ளன. இவ்வாசகங்கள் அமெரிக்காவிலும் கேட்டல் வேண்டும் என்று சுவாமிகள் கொடுத்த தீட்சையின் மகிமையால் இவ்வாசகங்கள் அமெரிக்கா, கனடா இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள் எங்கும் கேட்கின்றன. இத்தகைய அற்புதம் வெளிநாடுகளில் நடைபெறும் போது, இங்கே அன்றொரு நாள் பஞ்சம் படை வந்தாலும் அஞ்சுவமோ எனப் பாடியருளிய சிவயோக சுவாமிகளின் வாக்கு நாமறிய அற்புதஞ் செய்துள்ளது.

படைகளின் உபத்திரவமும் குண்டுவீச்சின் கோளாறுகளும் நடைபெற்றபோது கோளறு பதிகம் பாடியவண்ணம் மக்கள் எங்காம் புகலிடம் என்றெண்ணி இருள்வழியே நல்லூரையே புகலிடமாகக் கொண்டு புகுந்து நல்லூரானின் கஞ்சியையாவது பருகினார்களே, இவை அற்புதமோ திருவருளோ என்று அதிசயிக்க வேண்டியுள்ளன.

வீதி வலம்
வரும்
முருகனின்
திருவடி
போற்றும்
சும்மா
ரீ றூம்

## தீனரைக் காப்பாய் தேவே

பயங்கொண்ட வமரர் சிறை மீட்பதற் கெனவாறு
பங்கயத் துதித்த பாலா!
அயன்கொண்ட கர்வத்தை அடக்கக்குட் டிச்சிறையில்
அடைத்தகுழந் தாய றிஞனே!
ஜெயங்கொண்டு சூரனைச் சேவலும் மயிலுமாய்த்
திருப்பஞ்செய் தாண்ட சேந்நா!
நயங்கொண்ட பாமாலை சூ-டியுனைப் போற்றவருள்
நல்குவாய் நல்லூர் நாதா!
கொம்பாரெ ழிற்தெய்வ யானையைத் திருப்பரங்
குன்றில் மணந்த குமரா!
வம்பாயம் மான்மகள் வள்ளியைத் தணிகையில்
மன்றல்புரி சுப்ர மணியா
தெம்பாக நம்பியுன் சேவடிசி ரஞ்சூடு
தீனரைக் காப்பாய் தேவே
அப்போரு கங்களா நின்றோன்ற வழகனே!
அணிதேரூர் நல்லை அமிழ்தா!

செல்வி சூ. சிவபாக்கியம் அல்வாய்


நல்லைச்கந்தன் அருள் பாலிக்க!
நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்
நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
185, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.



நல்லைக்குமரன் அருள் பொழிக!
எல்லா விதமான அன்பளிப்பு
பொருட்களையும் நிதான விலையில்



முருகா! நீயே துணை!
தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
சீதா நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
27/ஏ, அர்ச்சுணா வீதி,
(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.
ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்



திக்கெங்கும் புகழ் மணக்கும்
ஞானவேல் முருகனின் திருவடி
பணிந்து வணங்கும்
★
ஸ்கந்தா மாஸ்ரர்
சங்கரத்தைச் சந்தி,
வட்டுக்கோட்டை.



அனு தினமுனை யெண்ணி
அலறுகின்றோமையா,
உனதருள் இல்லையோ முருகனேசொல்.
அருள் களஞ்சியம்
திருநெல்வேலிச்சந்தை,
திருநெல்வேலி.


# ராணுவ ரகசியங்களை வெளியிடுவதை தவிர்க்க

## பத்திரிகையாளரிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

உணர்ச்சிகரமான இராணுவ இரகசியங்களை வெளியிடுவதைத் தவிர்ப்பதன் மூலம் தொடர்புச் சாதனங்கள் அரசின் யுத்த நடவடிக்கைகளுக்கு உதவ முடியும் நாவாந்தகமவில் ஆடைத் தொழிற்சாலைக் கூட்டம் ஒன்றில் பேசும்போது பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா இதனைத் தெரிவித்தார்.

அரசியல் வாதிகளும் பத்திரிகைகளும் வடக்கு- கிழக்கு யுத்தத்தை ஒருமுடிவுக்கு கொண்டுவரத் தமது பங்களிப்பை வழங்கக் கடமைப் பட்டுள்ளார்கள் பத்திரிகைகள் யுத்த முயற்சிகளை வெளியிடுவது எமது போர் முயற்சிகளுக்குத் தடையாக உள்ளது என்றும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்

இரகசியங்களை பத்திரிகைகள் வெளியிட்டு வவருமாயின் நாம் வெற்றிகாண முடியுமா என சிந்திக்க வேண்டும் ஒரு முறை இது குறித்து ஒருபத்திரிகையாளருடன் பேசினேன். எம்போர் முயற்சிகளை முறியடிக்கவல்ல முறையில் எதற்காகஇராணுவ இரகசியங்களை வெளியிடுகின்றீர்கள் என்று கேட்டேன் எமக்கு போட்டியாக ஏனைய தினசரிகள் செய்தி வெளியிடுகின்றன என்று அப்பத்திரிகையாளர் பதிலளித்தார். அர்த்தமற்ற இந்த நடவடிக்கையால் பல உயிர்கள் பலியாகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பால்மா மானிய விலையில் வெளிநிறுவனங்கள் மறுப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு நிறுவனங்கள் குழந்தைகள் பால்மாவை சிறிலங்கா அரசுக்கு மானிய விலையில் விற்க மறுத்துள்ளன. சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் குழந்தைகளுககுப் பால்மாவுக்குப் பதிலாகத் தாய்ப்பால் ஊட்ட வேண்டும் என்று அண்மைக் காலங்களில் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார் இதனால் ஆத்திரமடைந்த குழந்தைகள் பால்மா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பல்நாட்டு நிறுவனங்கள் மானிய விலையில் அரசுக்கு பால்மாவைக் கொடுத்துச் சகாயம் செய்ப மறுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### விண்ணப்பம் கோரல்

கடந்த ஆண்டில் நடைபெற்ற க பொ த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் கோரப் படவுள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கை யொன்றில் மேலும் இதுவரை நிலவிய மூன்று மாத தாமதம் ஒன்ரறை வருடத்தால் குறையுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ. தே. க எம்.பிகள் பதவி விலக தேவையில்லை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த சிலருக்கு கட்சியில் இடமளிப்பதற்காக சில ஐ தே. க. எம்பிக்கள் பதவ்விலக வேண்டியிருக்கும் என வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என ஜனாதிபதி விஜேதுங்க உறுதியளித்துள்ளார். இது குறித்து எவரும் அச்சப்படத்தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

### ஜனாதிபதிதெரிவிப்பு

இதேவேளை முன்னர் ஐ. தே க. மீது பல குற்றச்சாட்டுகளை வாரி இறைத்த ஐ ஐ. தே முன்னணியினரை மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்காக ஐ தே.க. எம்பிக்களை ஜனாதிபதி பதவிவிலகுமாறு கோரும் சாத்தியம் இல்லை என ஐ தே. க வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

# வாக்கு மூலம் வலுக்கட்டாயமாகவே என்னிடம் பெறப்பட்டது

## ராஜீவ் கொலை வழக்கில் நளினி

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, தனுவின் குண்டினால கொலை செய்யப்படுவதற்கு சில மணிநேரங்களின் முன் தான் இக் கொலையில் பங்கேற்குமாறு நளினியை சுபா கேட்டிருந்தார் என ராஜீவ்காந்தி கொலைவழக்கு விசாரணையின் போது அரசு தரப்பு வழக்கறிஞரான பி. இராஜமாணிக்கம் கூறினார். பூந்தமல்லி விசேட நீதிமன்றத்

நளினி பங்கேற்றார். சென்னையில் சுபாவுடனும் தனுவுடனும் சேர்ந்து கடைகளுக்கும் நளினி சென்றிருக்கிறார். ஒரு பயங்கரமான பணியை செய்யவே சிவராசனும் ஏனைய புலிகள் இயக்க உறுப்பினர்களும சென்னையில் இருந்தார்கள என்பதை தான் அறிந்திருந்ததாகவும் நளினி கூறியிருக்கின்றார்.

வில்லிவாக்கத்தில் நளினியின் வீட்டில் சிவராசன் சுபா,

நாள் சிவராசன் தன்னைக் கேட்டுக்கொண்டதாக நளினி தனது வாக்குமூலத்தில் தெரிவிக்கின்றார். மே 21இல் அரை நாள் மாத்திரம் வேலை செய்த நளினி தனது வில்லிவாக்கம் வீட்டிற்கு அன்று மாலை சிவராசன் சுபா ஆகியோருடன் இணைந்து கொண்டார். அங்கிருந்துதான் அனைவரும் சிறிபெரம்புதூருக்கு புறப்பட்டனர் கொலை இடம் பெற்று இரு தினங்கள் கழித்து

நல்லைக்கந்தன் அருள் பாலிக்க!

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்

நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்

**நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்**

185, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.

பணிந்து வணங்கும்

★

**ஸ்கந்தா மாஸ்ரர்**

சங்கரத்தைச் சந்தி,

**வட்டுக்கோட்டை.**

அனு தினமுனை யெண்ணி
அலறுகின்றோமையா,
உனதருள் இல்லையோ முருகனேசொல்.

**அருள் களஞ்சியம்**

திருநெல்வேலிச்சந்தை,
திருநெல்வேலி.

நல்லைக்குமரன் அருள் பொழிக!
எல்லா விதமான அன்பளிப்பு
பொருட்களையும் நிதான விலையில்

பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம்

**கோல்டன் ரி. வி. றேட்**
**சென்ரர்**

2A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வண்ண வண்ணத் தேர்தன்னில்
விரூடனே ரதம் செல்ல
மக்கள் துன்பங்களை களைந்துவிடும்
வேலவனே போற்றி

**ரூபன் களஞ்சியம்**

பலசரக்கு மாளிகை,
இல. 9, திருநெல்வேலிச்சந்தை, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

இன்றைய அறிமுகம் நாளைய அறிமுகம்
முகூர்த்தப் பட்டுப் புடைவைகளை
உங்கள் விருப்பத்திற்கு
தெரிவுசெய்ய ஒரே ஸ்தாபனம்
சோபனா ஆடை அகம்

**சோபனா ஆடை அகம்**

16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

அல்லல்பட்டு வரும் அடியார்களுக்கு
அருள்புரிவார் வேல் முருகன்
நல்லூர் மண்ணில் கால்பட்டால்
பாவம் யாவும் தீர்ப்பான் முருகக் கடவுள்

**செல்லப்பா களஞ்சியம்**

404, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

**உங்களுக்குத் தேவையான**

★ ஆங்கில மருந்து, ★ பால்மா,
★ பழச்சாறு, ★ ஜாம்,
★ குளோசரி வகைகளை

நியாய விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**மருந்து பால்மா வகைகள்**

(தனியார்)வரைவுள்ளது.

484, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

# வாக்கு மூலம் வலுக்கட்டாயமாகவே என்னிடம் பெறப்பட்டது

## ராஜீவ் கொலை வழக்கில் நளினி

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, தனுவின் குண்டினால கொலை செய்யப்படுவதற்கு சில மணிநேரங்களின் முன் தான் இக் கொலையில் பங்கேற்குமாறு நளினியை சுபா கேட்டிருந்தார் என ராஜீவ்காந்தி கொலைவழக்கு விசாரணையின் போது அரசு தரப்பு வழக்கறிஞரான பி. இராஜமாணிக்கம் கூறினார். பூந்தமல்லி விசேட நீதிமன்றத்தல் நீதிபதி எஸ். எம். சித்திக் முன்னிலையில் வழக்கறிஞர் இராஜமாணிக்கம் ராஜீவ் காந்தி கொலையில் நளினி வகித்த பங்கு குறித்து விளக்மளித்த போது மிகவும் பதற்றத்துடன் காணப்பட்ட நளினி திடீரென நீதிபதியின் ஆசனத்தை நோக்கிச் சென்று "நான் வலுக்கட்டாயத்தின் பேரில் சங்கடமான சூழ்நிலையிலேயே ஒப்புதல் வாககு மூலத்தை அளித்தேன். நான் கர்ப்பணியாக இருந்த சமயம் அதுவும் உடல் நிலை குன்றியிருந்த சமயம் என்னிடம் வந்து வாகுக் மூலத்தைப் பெற்றார்கள். அந்த வாக்குமூலத்தை கணக்கில் எடுக்க வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார்.

நளினியின்வழக்கறிஞர் எஸ். துரைச்சாமி உட்பட எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களில் எவருமே அன்று (ஆகஸ்ட் 5) நீதிமன்றம் வரவில்லை. அரச தரப்பு வழக்கறிஞரின் வாதங்களை நளினி குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். அரச தரப்பு வழககறிஞர் இராஜமாணிக்கம் தொடர்ந்து தனது வாதத்தை முன் வைத்தார்.

சென்னையில் தனியார் கம்பனி ஒன்றில் உதவியாளராக பணியாற்றிய இந்திய தமிழ் பெண்ணான நளினியை ஒற்றைக்கண் சிவராசனின் அனுசரணையுடன் முருகன் தனுவுக்கும் சுபாவிற்கும் உதவபுரிய பழக்கினார். சுபாவும், தனுவும இலங்கைத் தமிழை பேசுபவர்கள் என்பதால் அவர்களுக்கு உதவியாக ஒரு தமிழ் பெண் இருப்பதையே சிவராசன் விரும்பினார். இதை இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இன்னொருவரான ரொபர்ட் பயஸ் தன் வாக்கு மூலத்தில் கூறியுள்ளார்.

இவர்கள் சகலருடனான பழக்கத்தின் காரணமாக நளினி காலப்போக்கில் புலிகள் இயக்கத்தின் விசுவாசமான அனுதாபியானார் முன்னாள் பிரதமர் வி.பி. சிங் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டம் ஒன்றில் சிவராசன் நடத்திய பரீட சார்த்தத்திலும் நளினி பங்கேற்றார். சென்னையில் சுபாவுடனும் தனுவுடனும் சேர்ந்து கடைகளுக்கும் நளினி சென்றிருக்கிறார். ஒரு பயங்கரமான பணியை செய்யவே சிவராசனும் ஏனைய புலிகள் இயக்க உறுப்பினர்களும சென்னையில் இருந்தார்கள என்பதை தான் அறிந்திருந்ததாகவும் நளினி கூறியிருக்கின்றார்.

வில்லிவாக்கத்தில் நளினியின் வீட்டில் சிவராசன் சுபா, தனு, முருகன் ஆகியோர் அடிக்கடி காணப்பட்டனர் என்பதை சாட்சியங்கள் கூறுகின்றன. இவ்வீட்டில் நளினி மட்டுமே தங்கியிருந்தார். சிவராசன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே நளினி வி.பி. சிங் இன் கூட்டத்தில் நடத்தப்பட்ட டரீட்சார்த்தத்தில் கலந்து கொண்டார். கூட்டத்தில் தாங்கள் ஆற்றவேண்டிய பங்குகள் குறித்து 1991 மே 6இல் தனக்கும் ஏனையோருக்கும் சிவராசன் விளக்கிக் கூறியிருந்ததாக நளினி குறிப்பிட்டுள்ளார். அதே மாதம அளவில் பெரிய சல்வார் கமீஸ் ஒன்றை தனு வாங்க நளினி உதவியிருக்கின்றார். இந்த சல்வார் கமீஸை அணிந்துகொண்டு தான் தனு இடையில் குண்டுகளை கட்டினார்.

அரைநாள் லீவை மாத்திரம் எடுக்குமாறு கொலை நடைபெற்ற தினத்திற்கு முதல் நாள் சிவராசன் தன்னைக் கேட்டுக்கொண்டதாக நளினி தனது வாக்குமூலத்தில் தெரிவிக்கின்றார். மே 21இல் அரை நாள் மாத்திரம் வேலை செய்த நளினி தனது வில்லிவாக்கம் வீட்டிற்கு அன்று மாலை சிவராசன் சுபா ஆகியோருடன் இணைந்து கொண்டார். அங்கிருந்துதான் அனைவரும் சிறிபெரம்புதூருக்கு புறப்பட்டனர். கொலை இடம்பெற்று இரு தினங்கள் கழித்து கொலையின் விபரங்களையும் கொலையில் தான் ஆற்றிய பங்கையும் நளினி தனது சகோதரனுக்கு விபரித்துள்ளார். இலங்கை தமிழரான முருகனை திருமணம் செய்திருப்பதாக உறவினர்களுக்கு நளினி கூறினார்.

இருவரும் மதுரை வந்து அங்கு உறவினர் ஒருவர் வீட்டில் தங்கினர். தமது வீட்டிற்கு அருகில் வாழ்பவர் விசேட பொலிஸ் பிரிவில் ஒரு இன்ஸ்பெக்டர் எனத் தெரிந்து கொண்டதும் நளினியும் முருகனும் ஜூன் 12இல் அங்கிருந்து மாயமாகினர். அன்று நளினியின் படம் தினசரிகளில் வெளியாகியிருந்தது. தனுவின் இடுப்பில் குண்டு இருந்தது நளினிக்கு தெரியும். இது தனுவுக்கும் நளினிக்கும் ஒரே நோக்கம் இருந்தது என்பதற்கு சமமாகும் என வழக்கறிஞர் தனது வாதத்தில் குறிப்பிட்டார். (இந்து)

# காதல்ஜோடிகள் சிரச்சேதம்

[டில்லி]

கிராமத்தை விட்டு ஓடிப் போன இளம் காதலர்கள் இருவரும் சிரச்சேதம் செய்யப் பட்ட சம்பவம் ஒன்று வட இந்தியாவில் காந்ரவாலி என்ற இடத்தில் இடம்பெற்றிருக்கிறது.

ஓடிப்போனவர்கள் ஐந்து மாதம் கழிந்த நிலையில் கடந்த வாரம் தமது கிராமத்திற்கு வந்த போது இருவரும் கோடரியினால் கழுத்து வெட்டப்பட்டு சிரச்சேதம் செய்யப் பட்டனர்.

இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலை ஒருவர் கூட தடுத்து நிறுத்த முயற்சித்ததாகத் தெரியவில்லை என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் கண்டனம் செய்திருககிறது.

இந்தப் பரிதாப காதல் ஜோடியின் செயல் சமூகத்தின் தூய்மையை மாசுபடுத்தி விட்டது என கிராமத்தவர்கள் கருதுவதால் சிரச்சேதத்தை அவர்கள் கண்டிக்க வில்லை என்று பொலிஸார் நிருபர்களிடம் தெரிவித்தனர்

தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் கிடந்த அவர்களின் சடலங்களை அப்புறப்படுத்தக் கூட ஒருவரும் தயாராயில்லை என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்தது.

---

## வாந்திபேதிநோய்

## பரவுகிறதாம்

(டில்லி)

பங்களாதேசிலும் இந்தியாவில் சென்னை கல்கத்தா மதுரை ஆகிய நகரங்களிலும் வாந்திபேதி நோய் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இதனை ஆரம்பத்திலே கட்டுப்படுத்தாவிட்டால் உலகில் ஏனைய பாகங்களிலும் பரவும் அபாயம் இருப்பதாக பங்காளதேஸ் வயிற்றோட்ட கட்டுப்பாட்டு மையமும் காலரா கட்டுப்பாட்டு நிபுணர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**சிந்தனைக்கு**

நியாயமான கோட்பாடுகளிலிருந்து
பொய்யான முடிவுகளை வடிப்பது மடமை;
பொய்யான கோட்பாடுகளிலிருந்து
நியாயமான முடிவுகளை வடிப்பது
பைத்தியகாரத்தனம்.
— ஜோன் லோக்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## கொழும்பு பல்கலைக்கழக மாணவரும் இன ஒடுக்கலும்

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கு திடீரென ஒடுக்கு முறைக்கெதிரான உணர்வு கிளர்ந்தெழுந்துள்ளது. பொஸ்னியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக, சேபிய இனத்தவர்கள் புரிந்து வரும் இனப்படுகொலையைக் கண்டித்து கொழும்பிலுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டன் தூதரகங்கள் முன் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளதோடு, மகஜர் ஒன்றையும் தூதுவராலயங்களில் ஒப்படைத்துள்ளனர்.

யார் செய்தாலும், இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், இரண்டு வருட காலத்திற்குள் பொஸ்னியாவில் இடம்பெறும் இனப்படுகொலைகள் குறித்து விழிப்படைந்துள்ள இம்மாணவர்கள் பத்து வருடங்களுக்கு மேலாக அதாவது அவர்கள் வாழும் இலங்கைத்தீவிற்குள்ளேயே இடம்பெற்றுவரும் இனப்படுகொலை பற்றியோ, இன அழிப்பைப் பற்றியோ கண்டு கொள்ளாமையும், இங்கு ஒடுக்கப்படும் மக்கள் குறித்தும் அக்கறை கொள்ளாமை அபூர்வமான தொன்றே ஆகும்.

பொஸ்னியாவில் சேபியர்களால் திட்டமிட்ட முறையில் இனப்படுகொலைகள், இன அழிப்புக்கள் நடைபெறுகின்றது என்பது உண்மைதான். வதை முகாம்கள், பெரும் அளவிலான பாலியல் வன்முறைகள் என்பனவும் இடம் பெற்றுள்ளன. பல ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளதோடு, லட்சக்கணக்கானோர் அகதிகளாகவும் வெளியேறியுள்ளனர்.

இருப்பினும் மூன்றாம் உலக நாடுகளில் மிகவும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்- படையிறக்கம், கண்டனத்தீர்மானம் - ஐ.நா. சபையும் சரி, ஐக்கிய அமெரிக்காவும் சரி, சேபியா விடயத்தில் இன்னமும் மென்போக்கையே கடைப்பிடிக்கின்றன. குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த போது உடனடி நடவடிக்கையில் இறங்கிய ஐ.நா. சபையும், அமெரிக்காவும் பொஸ்னிய விவகாரத்தில் இதுவரை எச்சரிக்கையுடனேயே நின்று கொண்டுள்ளன. இதனால், அமெரிக்காவினதும், ஐ.நா வின் செயற்பாடு குழுக்கள் குறித்து கண்ட

# பரீட்சை தொடர்பான பெற்றோர் நிலைப்பாடு மாணவர்களை குழப்பத்தில் ஆழ்த்துகின்றது

சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை. மாறும் சமுதாயத்தில் வாழும் மனிதரை வாழ வழிகாட்டுவது கல்வியின் நோக்கங்களில் ஒன்று. இந்தக் கல்வியின் நோக்கத்தின் குறிக்கோள் எவ்வளவிற்கு நிறைவேறிவருகின்றதென்ற உண்மையை இலங்கையின் கல்வி வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

### மனனம் செய்தல்:

மிகப்பழைய காலத்தில் பாடத்தையே மையமாக வைத்து கல்வி கற்பிக்கப்பட்டது. இக்கல்வி முறையில் சிலரே கல்விகற்றனர். இக்கல்வி முறையில் விளக்கமற்ற ''மனனம்'' முதல் இடம் பெற்றது. விவேக வளர்ச்சியோ அல்லது சிந்தித்து செயலாற்றும் முறையோ அல்லது விவாதித்து உண்மைகாணும் முறையோ முக்கிய இடத்தைப் பெறவில்லை. இக்குறைபாட்டை நீக்க மாணவரை மையமாக வைத்துக் கல்வி கற்பிக்கும் முறை உருவாக்கப்பட்டது

இந்தக் கல்வி முறையின் விவேக வளர்ச்சி, சிந்திக்கும் திறன் விவாதித்து உண்மை காணும் முறைகள் நன்கு வளர்ந்தன. இந்த முறையிலும் பாடத்திட்டம் குறிப்பிட்ட காலத்தில் முற்றுப் பெறவில்லை என்றும் மாணவர் பாட அறிவு வரையறுக்கப்பட்ட காலத்தில் வளரவில்லை என்றும் கல்விக்குப் பொறுப்பாகவுள்ளவர்கள் சுட்டிக்காட்டினர்.

### எழுத்துப் பரீட்சைக்கு முக்கியத்துவம்

மாணவர் கல்வி அறிவு முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எழுத்துப் பரீட்சைகள் தோன்றின. எழுத்துப் பரீட்சைகளுக்கு அளவு கடந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்த அடிப்படையில் பரீட்சையை மையமாக வைத்து கல்வி கற்பிக்கும் முறை தோன்றியது எழுத்துப் பரீட்சையை மையமாக வைத்து கற்பித்தால் ஏற்பட்ட ஏற்படும் தீய விளைவுகளை ஆராய வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம். இந்தக் கற்பித்தல் முறையில் ஏற்பட்ட ஏற்படும் விளைவுகளை இன்றைய கல்விமான்கள் ஆராய்கின்றார்கள்.

மாறும் சமுதாயத்திற்கு இக்கற்பித்தல் முறையாலும் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளை பெறவேண்டும் என்று எதிர்பார்க்கும் பெற்றோர் தம் பிள்ளைகளை தூண்டுவதாலும் ஏற்படும் விளைவுகளை ஆராய வேண்டும்.

எழுத்துப் பரீட்சை அடிப்படையில் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பலருடைய பாட அறிவின் ஆற்றலையும் அம்மாணவர் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றலையும் அவர்கள் சமுதாயத்தோடு எப்படி வாழ்கின்றார்கள் என்று அவதானித்த இலங்கைப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் சேர் ஐவர் ஜெனிங்ஸ் தம் கருத்தை பின்வருமாறு தெரிவித்தார்.

'இலங்கை மாணவர் பரீட்சையை முதன்மையாக வைத்து தாம் கல்வி கற்கும் காலம் முழுவதையும் பரீட்சைக்கு ஆயத்தம் செய்கிறார்கள். மேலதிகமாக நூல்களை வாசிப்பதுமில்லை. பொது அறிவை வளர்ப்பதற்கு பொருத்தமான நூல்களை வாசிக்கும் பழக்கமும் இல்லை சில மாணவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை தாமாகவே தீர்க்கும் ஆற்றலையும் பெறவில்லை.''

இன்றும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் முன்னேற்றத்தையும், பல்கலைக் கழகங்களில் கற்கத் தகுதியும் விருப்பமும் உள்ள மாணவர்களை எழுத்துப் போட்டிப் பரீட்சையே தீர்மானிக்கின்றது. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் தொகை ஆண்டு தோறும் அதிகரித்துக் கொண்டு போகின்றது. பல்கலைக்கழக இடவசதியும் பட்டதாரிகளின் எதிர்கால குறிப்பிட்ட தொழிற் துறைகளும் பல்கலைக் கழகங்களிற்கு தேர்ந்தெடுக்கும் மாணவர் தொகையைத் தீர்மானிக்கின்றன. பல ஆண்டுகளாக குறிப்பிட்ட ஒரே தொகை மாணவர்களை தேர்ந்தெடுப்பதால் ஏற்பட்டு வரும் தீய விளைவுகள் எவ்வளவு தூரம் சமுதாயத்தைப் பாதிக்கின்றது என்பது இன்று தெளிவாகிறது

### அனுமதி பாகுபாடு

பல்கலைக் கழகங்களில் இடவசதி மற்றும் கல்வி வசதிகள் இன்மையால் வெளிவாரியாக மாணவர் பல்கலைக் கழக கல்வி பெற இன்று சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. இம் முறையிலும் பாகுபாடு ஏற்படுகின்றது. தொழில் வழங்குவதிலும் உத்தியோக உயர்வு வழங்குவதிலும் மறைமுகமான பாகுபாடு ஏற்படுவதால் கல்விகற்கும் மாணவர்களுக்கும் தொழில்துறை கல்வி பெறுபவர்களுக்கும் மன முறிவு ஏற்படுகிறது ஏன் இந்த பாகுபாடு ஏற்படுகிறது என்று ஆராய்ந்தால் பரீட்சையில் வைக்கும் தவறான நம்பிக்கையும் வரையறுக்கப்பட்ட உத்தியோக உயர்வைச் சம்பள அடிப்படையில் வழங்குவதுமே காரணமாகும்.

இந்தப் பாகுபாடு மாணவர் உள்ளத்திலும் கல்வி கற்றபின் தொழில் வாய்ப்புப் பெற்று அத் தொழிலில் முன்னேற்றமடைய விரும்புவோர் உள்ளத்திலும் தோன்றுகின்றது. நல்ல சமுதாயம் உருவாகுவதற்கு இந்த தவறான நம்பிக்கை தடையாக அமைகின்றது.

### பெற்றோரின் தூண்டுதல்

கல்வியின் நோக்கங்களில் ஒன்று கற்றவர் மாறும் சமுதாயத்திற்கும் சூழலுக்கும் இயைய தம்மை பொருத்தமான முறையில் தமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை தரக்கூடிய முறையில் ஆக்கிக் கொள்ளல் கற்ற பெற்றோரை தம்பிள்ளைகளின் விருப்பம், திறன்கள் போன்றவற்றிற்கு மாறாக சில பாடங்களை கற்க வேண்டுமென்று பல்கலைக் கழக புகுமுக வகுப்புகளிலும் பரீட்சையில கூடுதலான புள்ளிகளை பெறவேண்டுமென்று இடைவிடாது தூண்டுதலாலும் பரீட்சை தொடர்பாக தம்பிள்ளைகளோடு தொடர்பு வைக்கும் முறைகளாலும பிள்ளைகள் பெற்றோரை வெறுக்கின்றனர்.

மாணவர்கள் தம் மனக் கவலையைத் தீர்க்க தீமை விளைவிக்கும் மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். மாணவர் வாழும் சூழலில் உள்ள கற்றோரும், ஆசிரியர்களும், பெற்றோர்களும மாறும் சமுதாயத்திற்குப் பொருத்தமான முறையில் தம்மை இயைபுபடுத்துதலோடு எதிர்காலத்தில் வாழும் மாணவர்களை நெறிப்படுத்தவேண்டும்.

பழைய நன்மை தரும் விழுமியங்களையும் புதிய விழுமியங்களையும் பரீட்சித்துப் பார்த்து தொடர்புபடுத்தி நவீனமயமாக்கினால் மாறும் சமுதாயத்தில் மாணவர் மனமுறிவின்றி வாழ முடியும்.

### கல்விக் குழு:

பொருத்தமான கல்வித் திட்டத்தை உருவாக்குவதில் யார் யார் இடம் பெறவேண்டும் என்ற வினா இறந்தகாலத்திலும் எழுந்தது இன்றும் இந்த வினாவை எழுப்புகிறார்கள். ஆரம்ப இடைநிலை உயர் கல்வி ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக அமைய வேண்டும். அனுபவமும் அறிவும் நிரம்பிய ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், வைத்திய நிபுணர்கள், கல்விமான்கள், அறிவும் ஆற்றலும் திறமையுள்ள கல்வி நிருவாகிகள் ஒரு நாட்டின் கல்வித் திட்டத்தை உருவாக்குவதில் இடம்பெறவேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட குழு சுதந்திரமாக இயங்கவேண்டும். அரசாங்கம் காலவரையறையோடு அல்லது காலவரையறையின்றி மாறலாம் அரசாங்கமாற்றத்தின் செல்வாக்கு தொடரும் கல்வித் திட்டத்தில் இடம் பெறக்கூடாது.

### ஆளுமை வளர்ச்சி

கல்வித் திட்டத்தை செயற்படுத்துபவர்கள் ஆசிரியர்கள், அறிவும் ஆராயும் திறனும் அனுபவமும் தொடர்ந்து கற்றலும் காலத்திற்குக் காலம் கற்பித்தல் பயிற்சியும் பெறும் வாய்ப்புமுள்ள ஆசிரியர்கள் கல்வித் திட்டத்தை செயற்படுத்த முடியும். மாணவர் உடல் வளர்ச்சி ஒன்றோடு ஒன்று தொடர்புடையது, உடலும் உள்ளமும் விருத்தியடைந்தால் நல்ல ஆளுமை வளரும். வைத்திய சேவையும் மாணவர்களை உருவாக்குவதில் கூட்டுப்பொறுப்பாக அமைவதால் மாணவர் ஆளுமை வளர்கிறது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றத்தான் ஆசிரியர் சேவைக்கும் வைத்திய சேவைக்கும் சம மதிப்பும் சமமான சம சம்பளத்தையும் பிரிட்டன் வழங்குகின்றது. இந்த இரு தொழில்களையும் கௌரவத் தொழில்களாக பிரிட்டன் கருதுகிறது. இலங்கையில் அந் நாட்டின் கல்வி முறையின் சில விசேட அம்சங்கள் இடம் பெறும் மேற் கூறிய சமமான வருவாயை ஆசிரியர்கள் பெறாமல் இருப்பது மனவருத்தமான செயலாகும்.

நன்றி:- வீரகேசரி

**கலாநிதி அ. சின்னத்தம்பி**

## சிறிய பத்திரிகைகள் குறித்து புகார்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸா

### இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றம் இன்றும் நாளையும் மாலை நல்லூர் ஆதீனத்தில் இசைவிழா ஒன்றை நடத்துகின்றது பல

## ஜனதா-மித்துரா என்ற புதிய கட்சி உதயம்

(கொழும்பு)

கட்சியின் செய்திப் பத்திரிகை

பொஸ்னியாவில் சேபியர்களால் திட்டமிட்ட முறையில் இனப்படுகொலைகள், இன அழிப்புக்கள் நடைபெறுகின்றது என்பது உண்மைதான். வதை முகாம்கள், பெரும் அளவிலான பாலியல் வன்முறைகள் என்பனவும் இடம் பெற்றுள்ளன. பல ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளதோடு, லட்சக்கணக்கானோர் அகதிகளாகவும் வெளியேறியுள்ளனர்.

இருப்பினும் மூன்றாம் உலக நாடுகளில் மிகவும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்- படையிறக்கம், கண்டனத்தீர்மானம் - ஐ.நா. சபையும் சரி, ஐக்கிய அமெரிக்காவும் சரி, சேபியா விடயத்தில் இன்னமும் மென்போக்கையே கடைப்பிடிக்கின்றன. குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த போது உடனடி நடவடிக்கையில் இறங்கிய ஐ.நா. சபையும், அமெரிக்காவும் பொஸ்னிய விவகாரத்தில் இதுவரை எச்சரிக்கையுடனேயே நின்று கொண்டுள்ளன. இதனால், அமெரிக்காவினதும், ஐ.நா வின் செயற்பாடு குழுக்கள் குறித்து கண்டனம் எழுப்புவது நியாயமே.

இதேவேளை, பொஸ்னியா போன்றே இலங்கையிலும் தமிழ் மக்கள் இன ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ளனர். கடந்த சில வருடங்களில் மட்டுமே பல்லாயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர், அகதிகளாகி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உறைகின்றனர். அத்தோடு, சேபிய இராணுவம் பொஸ்னியாவின் பகுதிகளை ஆக்கிரமித்துள்ளது போன்று, தமிழர் தாயகத்தை சிங்களப் பேரினவாதமும் ஆக்கிரமித்துள்ளது.

இவை ஒருபுறம் இருக்க கடந்த பத்துவருடத்தின் மேலாக இடம்பெற்று வரும் போரினால் அரசிற்கும் பலஆயிரம்கோடிருபா இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன நாட்டின் வரவில் கணிசமான பங்கு யுத்தத்திற்கு செலவிடப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ளதோடு. விலைவாசி ஏற்றம், வேலையில்லாப் பிரச்சினை என்பனவும் அதிகரித்துவருகின்றன. பொருளாதார நெருக்கடி அதிகரிக்க, அதிகரிக்க உலக நிதி நிறுவனங்களின் நிர்ப்பந்தங்களுக்கு அரசாங்கம் பணிந்து நடக்க வேண்டிய நிலை உருவாகி வருகின்றது.

இந்நிலையிலும், பொஸ்னியா விடயத்தில் அக்கறை காட்டிய கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள், இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறை காட்டாது விட்டது ஏன்? இலங்கையில் அவ்வாறானதொரு பிரச்சினை இல்லை என்றா? அல்லது இவ்விடயத்தில், சிங்கள அரசாங்கம் மேற்கொள்ளும் இனப்படுகொலைகள் நியாயமானவை, தமிழர் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்ற முடிவினாலா?

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் இந்நடவடிக்கையானது தனது நோயைப்பற்றி அறியாதவர், மற்றவர் நோய்க்கு மருந்து கூறுவதற்கு ஒப்பானதாகும். இது அவர்களின் இரண்டும் கெட்டான் நிலையையே காட்டுகிறதாகும். ஆனால், இதற்கு வேறு எவரும் பொறுப்பல்ல. ஏனெனில் அவர்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள். முடிவுகளை அவர்களே எடுக்கத் தகுதி வாய்ந்தவர்கள். ஆகையினால், இனப்பிரச்சினை குறித்து அவர்கள் எவ்வித குரலும் எழுப்பாமல் இருப்பது அவர்களின் பேரினவாத சிந்தனையின் வெளிப்பாடே ஆகும். இந்நிலையில் இன அழிப்பில் ஈடுபடும் சேபியர்களுக்கு எதிராக குரல்எழுப்ப இவர்களுக்கு என்ன அருகதை உண்டு?

...டினர்.

### எழுத்துப் பரீட்சைக்கு முக்கியத்துவம்

மாணவர் கல்வி அறிவு முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எழுத்துப் பரீட்சைகள் தோன்றின. எழுத்துப் பரீட்சைகளுக்கு அளவு கடந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்த அடிப்படையில் பரீட்சையை மையமாக வைத்து கல்வி கற்பிக்கும் முறை தோன்றியது எழுத்துப் பரீட்சையை மையமாக ...

... மாணவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை தாமாகவே தீர்க்கும் ஆற்றலையும் பெறவில்லை.''

இன்றும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் முன்னேற்றத்தையும், பல்கலைக்கழகங்களில் கற்கத் தகுதியும் விருப்பமும் உள்ள மாணவர்களை எழுத்துப் போட்டிப் பரீட்சையே தீர்மானிக்கின்றது. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் தொகை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு போகின்றது. பல்கலைக்கழக ...

... காரணமாகும்.

இந்தப் பாகுபாடு மாணவர் உள்ளத்திலும் கல்வி கற்றபின் தொழில் வாய்ப்புப் பெற்று அத் தொழிலில் முன்னேற்றமடைய விரும்புவோர் உள்ளத்திலும் தோன்றுகின்றது. நல்ல சமுதாயம் உருவாகுவதற்கு இந்த தவறான நம்பிக்கை தடையாக அமைகின்றது.

### பெற்றோரின் தூண்டுதல்

கல்வியின் நோக்கங்களில் ஒன்று கற்றவர் மாறும் சமுதாயத்திற்கும் சூழலுக்கும் ...

... சமுதாயத்தில் மாணவர் மன முறிவின்றி வாழ முடியும்.

### கல்விக் குழு:

பொருத்தமான கல்வித் திட்டத்தை உருவாக்குவதில் யார் யார் இடம் பெறவேண்டும் என்ற வினா இறந்தகாலத்திலும் எழுந்தது இன்றும் இந்த வினாவை எழுப்புகிறார்கள். ஆரம்ப இடைநிலை உயர் கல்வி ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக அமைய ...

... க்கும் சம மதிப்பும் சமமான சம சம்பளத்தையும் பிரிட்டன் வழங்குகின்றது. இந்த இரு தொழில்களையும் கௌரவத் தொழில்களாக பிரிட்டன் கருதுகிறது. இலங்கையில் அந் நாட்டின் கல்வி முறையின் சில விசேட அம்சங்கள் இடம் பெறும் மேற் கூறிய சமமான வருவாயை ஆசிரியர்கள் பெறாமல் இருப்பது மனவருத்தமான செயலாகும்.

நன்றி:- வீரகேசரி

## சிறிய பத்திரிகைகள் குறித்து புகார்

(கொழும்பு)

'பத்தி அளவு' சிங்களப் பத்திரிகைகள் அவதூறு பரப்பும் செய்திகளைப் பரப்பி வருவதாக அரச பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. மூத்த அமைச்சர்கள் சிலரே இவ்வாறு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக அவதூறாக எழுதிய 'பத்தி அளவு' மற்றும் சிறுபத்திரிகைகள் மீளவும் அரசாங்கத்துக்கு எதிரான செய்திகளையும், அமைச்சர்களுக்கும் சில எதிர்க்கட்சியினருக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் செய்தி வெளியிட்டு வருவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது.

## விகாராதிபதியின் தலையை துண்டித்த பிக்குகள்

களுத்துறை கங்காராமா அதிபதி தேமினியே மங்கள தேரோ (72) எனனும் வயோதிப பிக்குவின் கழுத்தை வெட்டி கொலை செய்து சடலத்தை ஆற்றில் வீசினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அதே விகாரையைச் சேர்ந்த இரு இளம் பிக்குகள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிக்குவை கொன்ற இளம் பிக்குகள் இருவரும் அவரது சடலத்தை அவரின் காரிலேயே போட்டுச் சென்று ஆற்றில் எறிந்துள்ளதாக விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது. கொல்லப்பட்ட பிக்குவின் கழுத்தில் 50 இறாத்தல் நிறையுள்ள கல் ஒன்றும் கட்டப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் அரசகருமமொழி நடைமுறையில் இல்லை

(கொழும்பு)

தமிழ் மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்ட போதிலும் அது ஏட்டளவில் உண்டே தவிர செயலுருவில் காணமுடியவில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது. அரச மற்றும் மாகாணசபை நிர்வாக அதிகாரிகள் தொடர்ந்து சிங்கள மொழியிலேயே சுற்று நிருபங்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றனர்.

இதேவேளை தெற்கில் தமிழுக்கு அரசகருமமொழி அந்தஸ்து வழங்கப்பட முன்னர் பஸ் பெயர்ப்பலகைகளில் மும்மொழிகளில் காணப்பட்டன ஆனால் இப்போது அவை தனிச்சிங்களத்திலேயே காணப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கற்பிட்டியில் கடல்ரோந்து அதிகரிக்க கோரிக்கை

புத்தளம் மாவட்ட கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டுவ, வெள்ளமுந்தல் பனியவந்த, குச்சிமுனை, போன்ற பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துமாறும் கடற்படை ரோந்துப் படகுகளை சேவையில ஈடுபடுத்துமாறும் இப்பகுதி எம்.பி ஒருவர் பாராளுமன்றத்தில் கோரியுள்ளார்.

எழுவன்குளம் பாதுகாப்பு முகாம் இரு தடவை புலிகளால் தாக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியில் பாதுகாப்பு அச்சுறுத்தல் எழுந்துள்ளது முன்னர்போல் இங்கு நிரந்தர இராணுவ முகாம் அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றம் இன்றும் நாளையும் மாலை நல்லூர் ஆதீனத்தில் இசைவிழா ஒன்றை நடத்துகின்றது பல புதிய மன்ற மாணவர் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர் மேலைத்தேய கர்நாடக இசைக்கருவிகள் இவ்விசைநிகழ்வில் பயன்படுத்தப்படுகின்றன.

### கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சுகாதாரப்பிரிவும், வடமாகாணபுற்று நோய் சங்கமும் கூட்டாக இணைந்து நல்லூர் உற்சவகாலச் சுகாதாரக்கண்காட்சி ஒன்றை நடத்தி வருகின்றன. (24)

### ஆதாரம் காட்டிப் பெறவும்

கோண்டாவில் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பெண்களுக்கான கடிகாரமொன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

### தற்கொலை

நோயின் கொடுமையினாலும், மருமகனை படையினர் பலவருடங்களுக்கு முன்னர் கடத்தியமையினாலும், வேதனையுடன் வாழ்ந்து வந்த குடும்பஸ்தர் நஞ்சருந்தி மரணமானார்.

இச்சம்பவம், நெல்லியடியிலுள்ள ஆச்சிரமத்திற்கு அருகில் இடம் பெற்றது.

நல்லதம்பி மார்க்கண்டு (வயது60) என்னும் வயோதிபரே, மரணமானவராவார். இது சம்பந்தமான விசாரணையை மேற்கொண்ட உடுப்பிட்டி பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. V நடராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். 30

### கூட்டம்

துன்னாலை கிழக்குகிராமிய உற்பத்திக்குழுவின் புனரமைப்புக் கூட்டம் கடந்த 11-ம் திகதி, வெலிக்கந்தை தோட்டப் பிள்ளையார் ஆலயத்தில் கிராம சேவை அலுவலர் திரு ஜெபசீலன் தலைமையில் நடைபெற்றது.

## ஜனதா-மித்துரா என்ற புதிய கட்சி உதயம்

(கொழும்பு)

ஜனதா மித்துரா என்ற பெயரில் புதிய அரசியல்கட்சி ஒன்று தெற்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்சியின் ஆரம்பம் குறித்து கொழும்பு நகரிலும் சுற்றுப் புறங்களிலும் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

இந்த புதிய கட்சியில் தேசிய சிந்தனை இயக்கத்திலிருந்தும் ஜே வி. பியிலிருந்தும் பிரிந்து சென்றோர் அங்கம் வகிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் செய்திப் பத்திரிகையொன்றும் வெளியாகியுள்ளது எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் கட்சி போட்டியிடும் என்றும் இடதுசாரி இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றவர்களும் எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகளினால் அதிருப்தி அடைந்தவர்களும் இப்புதிய கட்சியில் சேர்ந்துள்ளதாக கட்சியின் அமைப்பாளர்களான சம்பிகா ரணவன, மல்லிகா விமலசூரிய ஆகியோர் தெரிவித்தனர்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு நாடுகளுடன் ஒப்பந்தம்

இலங்கையிலிருந்து லெபனான், சைப்பிரஸ் ஆகிய நாடுகளில் தொழில் பெற்றுச் செல்லும் இலங்கையரின் நன்மை கருதி இவ்விரு நாடுகளுடனும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையர் தொழில் பெற்றுச் செல்லும் ஏனைய சகல நாடுகளுடனும் இது போன்ற ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளப்படவுள்ளதாகவும் இதன் மூலம் வேலை பெற்றுச் செல்வோர் பாதுகாப்பு. சம்பளம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றி இரு நாடுகளும் கூட்டாகச் செயல்பட முடியுமென்றும் அப்பணியகம் தெரிவித்துள்ளது.

## ஓய்வூதியர் தினம் பிரகடனம் செய்யக் கோரிக்கை

ஓய்வூதியக்காரர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி 260 ரூபாவை உடனடியாக வழங்க வேண்டும் ஓய்வூதியதினம் ஒன்றைப் பிரகடனம் செய்ய வேண்டும் எனும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஓய்வூதியர் சங்கங்களினால் ஓய்வூதிய திணைக்களப் பணிப்பாளர் ஆர்.டபிள்யூ பியசேனவிடம் கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில்மேலும், ஓய்வூதிய ஒழுங்கீனங்களைத் தீர்த்தல், ஓய்வு பெற்றபின் மணந்த மனைவிக்கும் ஓய்வூதியம் வழங்கல், ஓய்வூதியக்காரர்களுக்கு பண்டிகைக்கால முற்பணம் வழங்கல், விதவைகள் அநாதைகளுக்கான பங்களிப்புப் பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுத்தல், ஓய்வூதியக்காரருக்கு 3 தொகுதி ரயில் வாரண்ட் வழங்குதல். அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒவ்வொன்றுக்கும் 5 ரூபா வழங்குதல், ஓய்வூதியக்காரர் இறந்தபின் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் மணம் முடிக்காத மகளுக்கும் ஓய்வூதியம் வழங்கல், ஓய்வூதியக்காரர்களுக்கு விடுமுறை சலுகைகள் அமைத்தல் முதலிய கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை முழுவதும் இப்போது 200க்கும் மேற்பட்ட ஓய்வூதியக்காரர் சங்கங்கள் உள்ளன மேலும் மூன்று லட்சத்து 10 ஆயிரம் ஓய்வூதியக்காரர்கள் உள்ளனா 1960 ஆம் ஆண்டில் 60 ஆயிரம் ஓய்வூதியக்காரர் மட்டுமே இருந்தனர் என புள்ளி விபரமொன்று தெரிவிக்கிறது.

# ஈழநாதம்

# சென்னை குண்டு வெடிப்பு முஸ்லிம் தலைவர் கைது

(டில்லி)

சென்னையிலுள்ள ஆர்.எஸ்.எஸ். தலைமையகக் குண்டு வெடிப்பை யொட்டி தமிழ் நாட்டுப் பொலிசார் விசாரணைக்குட்படுத்துவதற்காக முஸ்லிம் தலைவர் ஒருவரைத் தடுத்து வைத்துள்ளனர். தடாச் சட்டத்தின் கீழ் பழனி பாபா என்ற முஸ்லிம் தலைவரை தாங்கள் கைது செய்துள்ளதாகவும், இவர் தமிழ்த் தீவிரவாதிகளின் அனுதாபி எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் இக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும் பழனி பாபாவுக்குச் சம்பந்தம் இருப்பதற்கான சான்றுகள் எதுவும் இல்லையென்றும் பொலிசார் தெரிவித்தனர். சென்னையிலிருந்து இயங்கும் ஜிகாத் இயக்கத்தின் தலைவரான பழனி பாபா வெறும் வாய்ப் பேச்சாளராவார் எனவும் ஒரு சிறிய இனக்கலவரத்தை அவரால் ஏற்படுத்த முடியுமே ஒழிய வேறு எதையும் அவரால் சாதிக்க முடியாதென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இக்குண்டு வெடிப்பில் தமிழ்-முஸ்லிம் குழு ஒன்று சம்பந்தப்பட்டுள்ளதெனத் தாங்கள் சந்தேகிப்பதாக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என கூறப்படும் முஸ்லிம் தலைவரான பழனி பாபாவே இக் குண்டு வெடிப்பின் சூத்திரதாரி என்று பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த ஜனா கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

ஆர். எஸ். எஸ். தலைமைக் காரியாலயத்தை குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக பழனி பாபா பகிரங்கமாகப் பயமுறுத்தினார் எனவும் தான் அது குறித்து பொலிசாருக்கு தெரிவித்திருந்ததாகவும் கிருஷ்ணமூர்த்தி சென்னையில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

## தெல்லிப்பழை துர்க்காதேவி உற்சவம்

[கொழும்புத்துறை]

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

தேர் உற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையும், தீர்த்த உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஆவணி ஓணம் நட்சத்திரத்திலும் இடம்பெறும்.

மாலை வசந்த மண்டபப் பூசையை அடுத்து கொடியிறக்கம் நடைபெறும். (24)

## மாணவர்க்கு உதவத்திட்டம்

(வடமராட்சி)

இன்பருட்டி சிக்கன கடன் உதவுக் கூட்டுறவுச்சங்கம் அப்பகுதி மாணவர்களின் நலன் கருதி மாதாந்த அடிப்படையில் துவிச்சக்கரவண்டிகளை வழங்க ஏற்பாடுகளை மேற்

## காஸ்ரோ விமானத்திற்கு எண்ணெய் வழங்க மறுப்பு

(கார்ட்டா ஜெனா)

கியூபா ஜனாதிபதி காஸ்ரோவின் உத்தியோகபூர்வ விமானத்திற்கு எரிபொருள் நிரப்ப பலநாட்டு எண்ணை கம்பனிகள் மறுத்துவிட்டதால் கொலம்பியா விமான நிலையத்தில் அவர் காத்திருக்க நேர்ந்தது. கியூபா மீது அமெரிக்கா வர்த்தகத் தடை விதித்திருப்பதே இதற்கு காரணமாகும்.

எனினும் கொலம்பிய வெளிநாட்டமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் சிவில்விமான போக்குவரத்து அதிகாரிகள் ஆகியோர் தலையிட்டதன் பேரில் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. கொலம்பிய எண்ணெய்நிறுவனமான டெர்பெல் வெற்று எண்ணெய் பௌசர் ஒன்றை அனுப்பி எரிபொருளை வாங்கி கியூபா விமானத்திற்கு வழங்கியதை அடுத்தே காஸ்ரோ நாடு திரும்பினார்.

## தையலுக்கு பதில் பசை

மனித உடலில் ஏற்படும் வெட்டுக்காயங்களுக்கு தையல் போடுவதற்கு பதிலாக புதியரக உயர்தர பசையை டாக்டர்கள் விரைவில் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என இங்கிலந்தின் பிராட்போர்ட் பல்கலைக்கழக உயிரியல் ஆராய்ச்சித் தலைவர் டாக்டர் அலன் ரொபர்ட்ஸ் தெரிவித்தார்.

பல்வேறு இரசாயனப் பொருட்களின் சேர்க்கையான இந்த பசை போர் காயங்களை மூடுவதற்கும் பயன்படும் என்றும் இதை கண்டுபிடிக்க எட்டு வருடங்கள் தமக்கு பிடித்தது என்றும் ரொபார்ட் தெரிவித்தார். அடுத்த 12 மாதங்களில் இது பாவனைக்கு வரும் என்றும் அவர் கூறி

## பீரங்கி தாக்குதல்

(வடமராட்சி)

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா கடற்படை அப்பகுதிக் குடியிருப்புக்களை நோக்கி கடந்த வியாழக்கிழமை இரவு பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். நேற்று முன் தினம் இரவும் பலாலி முகாமிலிருந்து தொண்டமனாறு பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன.

[யோ]

## நீரிறைக்கும் இயந்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் நூறு றொபின் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வந்துள்ளன. இவற்றில் 40 இயந்திரங்கள் யாழ் ப நோ.கூ சங்கத்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வழங்கப்படும் எனச் சங்கத்தின் பொது முகாமையாளர் மு சிவப்பிரகாசம் தெரிவித்தார். மிகுதி 60 நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஏனைய ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கான்ஸ்டபிள் பலி

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்திலுள்ள புளியங்குளம் பொலிஸ் காவல்நிலையத்தில் துப்பாக்கி ஒன்று தற்செயலாக வெடித்ததால் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்.

பியசேன என்னும் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

## மர்மக் கடித உறையால் வெள்ளை மாளிகை பதற்றம்

அமெரிக்க வெள்ளை மாளிகை மைதானத்தில் சந்தேகத்திற்கு இடமான பொருள் ஒன்று காணப்பட்டதால் ஜனாதிபதி கிளின்ரன் உட்பட எவரையும் வெள்ளை மாளிகைக்கு வெளியே செல்லவும் உள்ளே பிரவேசிக்கவும் உளவுப்பிரிவினர் அனுமதி மறுத்தனர். இதனால் ஜனாதிபதி கிளின்டன் 15 நிமிடங்கள் வரை வெள்ளை மாளிகைக்குள் செல்ல முடியாது காத்திருக்க வேண்டியிருந்தது.

பத்திரிகைகளிலிருந்து வெட்டப்பட்ட செய்திகளைக் கொண்ட உறையே அந்த மர்மப்பொருள் என பின்னர் அதிகாரிகள் அறிந்துகொண்டனர். 8 அங்குல அகலமும் 11 அங்குல நீளமும் கொண்ட இந்த உறையில் வில்லியம் ஜெபர்சன் கிளின்டன் என பெயர் எழுதப்பட்டிருந்தது.

## டைம்ஸின் அச்சம்

[டில்லி]

விடுதலைப் புலிகள் இப்பிராந்தியத்தின் மிகப்பெரும் அச்சுறுத்தும் சக்தியாக மாறி

## 2 வயது குழந்தையை கடத்திச் சென்று களவு

(கொழும்பு)

வடபகுதியில் இருந்து வந்து கொழும்பில் தங்கி நிற்கும் தமிழர்களிடம் சூறைபாடும் நபர்கள் புதுப்புது தந்திரோபாயங்களை தினம் தினம் கையாண்டு வருகின்றனர் அத்துடன் ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் இத்தகைய திருட்டுச் செயல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

# கச்சதீவு குறித்த நிலை உடன் வெளியிடுக

### மத்திய அரசை ஜெயலலிதா வற்புறுத்து

(தமிழ்நாடு)

ராமேஸ்வரம் மீனவர்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் கொடுத்துவருகின்ற தொல்லைகளில் இருந்து விடுபட உடனடியாக கச்சதீவின் மீதான இந்தியாவின் நிலையை இலங்கை அரசிற்கு தெரிவிக்க வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இப்பிரச்சினைக்கான தீர்மானமொன்றுசட்டப்பேரவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இப்பிரச்சினைக்கு மத்திய அரசை உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கச்சை தீவை இந்தியாவிற்கு சொந்தமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கோரிவருவது குறிப்பிடத்தக்கது.

## சந்நிதி ஆலயத்தில் மினிக்கச்சேரி

(வடமராட்சி)

தொண்டமனாறு சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ள உற்சவ காலத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகம் மினிக்கச்சேரியை அமைத்து பக்தர்களுக்கு உதவும் வகையில் கண்காணிப்பு சேவையை நடாத்தவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் திரு சி. முருகேசம்பிள்ளை தலைமையில் இயங்கும் மினிக்கச்சேரியில் கிராம உத்தியோகத்தர்கள் பணியாற்றவுள்ளனர்.

பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் தமது பணியை அங்கு மேற்கொள்ளும். (யோ)

## பதவிக்கு விண்ணப்பிக்குக

சிரேஷ்ட நெசவு மேற்பார்வையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்குத் தகுதியானவர்களை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விண்ணப்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய தகைமைகள் 31 - 08 - 93 அன்று நெசவுப் போதனாசிரியர் பதவியில் எட்டு வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்தவராயும், விண்ணப்பத் திகதிக்கு உடன் முன்னுள்ள ஐந்து வருட காலத்தில் திருப்திகரமான சேவைகளைப் பூர்த்தி செய்தவராகவும் இருக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

இப்பதவிக்கான சகல விண்ணப்பங்களும் இம் மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தத்தமது பகுதிப்புடவைக்கைத்தொழில் பணிப்பாளர்ஊடாக அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது (24)

## பல இடங்களில்

மருதமடுப் பகுதி இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருந்தனர். அத்துடன் மேலும் 2000 பொதுமக்கள் இராணுவத்தினரிடம் அகப்பட்டிருந்ததுடன் பெருமளவு விளைநிலங்களும் நாசமாகியமை குறிப்பிடத்தக்கது.

## சிறுபான்மையின் உரிமையை மதிக்காவிடின் தீர்வில்லை

### செல்லச்சாமி தெரிவிப்பு

அவசரகாலச் சட்டம் அமுலில் இருப்பதனால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது. கோடிக்கணக்கான ரூபாய்களை அநாவசியமாகச் செலவிட வேண்டியிருக்கின்றது. அதே வேளையில், ''நாட்டில் மக்களுக்குச் சுதந்திரமில்லை; மக்களுக்குப் பாதுகாப்பில்லை'' என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. இவையெல்லாவற்றுக்கும் காரணம்-அஸ்திவாரம் - என்னவென்பதை நாங்கள் தெரிந்திருந்தும் அதைத் தீர்ப்பதற்கு நம்மிடத்திலே மனமாற்றம் ஏற்படவில்லை. அந்த மனமாற்றம் ஏற்படாத வரை, பெரும்பான்மை-சிறுபான்மையின மக்கள் மத்தியிலே இருக்கின்ற பிரச்சினைகளுக்குச் சரியான முறையிலே தீர்வு காணப்படாத வரை இப்படியான சட்டங்கள் அமுல் படுத்தப்படுவதைத் தவிர்க்க முடியாது. இவ்வாறு ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ஜனநாயகம் என்றால் பெரும்பான்மையினம் சிறுபான்மை மக்களின் உரிமைகளை அங்கீகரித்து, அவர்களின் மனதிலே இருக்கின்ற சந்தேகங்களைப் போக்கி, அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்திலே அவர்களை நடத்திச் செல்வது புக்களாலும் ஏற்பட்ட விளைவுகள் தாம் இன்றைய நிகழ்வுகள். இன்று ஒருவர் மீது மற்றவர் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்ற வேளைகளில் நாம் நேரத்தைக் கழித்துக் கொண்டிக்கின்றோம் ஒவ்வொரு மாதமும் இங்கே அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தபோது நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிப் பேசுகிறோம்

இன்று அகால மரணங்கள் ஏற்படுவதும் செத்துமடிவதும் இரத்த ஆறு ஓடுவதும் கொலைகள் நடைபெறுவதும் சாதாரண மனிதன் முதல் நாட்டின் தலைவர் வரை கொலை செய்யப்படுவதும் இன்று சகஜமாகி விட்டன. அதேபோல் அவ்வாறான நிகழ்வுகளை ஒரு வாரத்தில்— பத்து நாட்களில், மறந்துவிட்டு அடுத்தவற்றைப் பற்றிப் பேசுகின்ற நிலைமையும் இன்று வலுவடைந்து வருகின்றது.

அரசியல் தீர்வுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி என்று சொல்லப்படுகின்றது. அரசியல் தீர்வு என்றால் அரசியல் தீர்வொன்றைக் கண்டுபிடிப்பதற்கு ஏன் தயக்கம்? எமது நாட்டிலேயுள்ள நாம் தான் இதற்கு அரசியல் தீர்வைக் கண்டுபிடிக்க முடியும். இதற்கு வெளிநாடுகள்தேவையில்லை சர்வதேச ஆலோசனைகள்தேவையில்லை என்றார்.

ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

தேர் உற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலையும், தீர்த்த உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஆவணி ஓணம் நட்சத்திரத்திலும் இடம்பெறும்.

மாலை வசந்த மண்டபப் பூசையை அடுத்து கொடியிறக்கம் நடைபெறும். (24)

## மாணவர்க்கு உதவத்திட்டம்

(வடமராட்சி)

இன்பருட்டி சிக்கன கடன் உதவுக் கூட்டுறவுச்சங்கம் அப்பகுதி மாணவர்களின் நலன் கருதி மாதாந்த அடிப்படையில் துவிச்சக்கரவண்டிகளை வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. தூர இடங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படுகின்ற போக்கு வரத்து கஷ்ட நிலையைக் கருத்திற் கொண்டே இந் நடைமுறையை செய்துள்ளது.

முதலில் பத்து துவிச்சக்கர வண்டிகளை வழங்க இச்சங்கம் தீர்மானித்ததோடு தொடர்ந்தும் துவிச்சக்கர வண்டிகளை மாணவர்களுக்கு வழங்கவுள்ளது.

(யோ)

## ...பதில் பசை

மனித உடலில் ஏற்படும் வெட்டுக்காயங்களுக்கு தையல் போடுவதற்கு பதிலாக புதியரக உயர்தர பசையை டாக்டர்கள் விரைவில் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என இங்கிலந்தின் பிராட்போர்ட் பல்கலைக்கழக உயிரியல் ஆராய்ச்சித் தலைவர் டாக்டர் அலன் ரொபர்ட்ஸ் தெரிவித்தார்.

பல்வேறு இரசாயனப் பொருட்களின் சேர்க்கையான இந்த பசை போர் காயங்களை மூடுவதற்கும் பயன்படும் என்றும் இதை கண்டுபிடிக்க எட்டு வருடங்கள் தமக்கு பிடித்தது என்றும் ரொபார்ட் தெரிவித்தார். அடுத்த 12 மாதங்களில் இது பாவனைக்கு வரும் என்றும் அவர் கூறினார்.

## காஷ்மீரை பிரிக்கமுடியாது

(டில்லி)

இந்தியாவிலிருந்து காஷ்மீரை எவராலும் பிரிக்க முடியாது இதை பாகிஸ்தான் உணரும்போதுதான் இந்திய பாகிஸ்தான் உறவு வலுக்கும் என இந்தியாவின் 47ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு டில்லி செங்கோட்டையில் உரையாற்றிய பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார் 70 நிமிடங்கள் இவரின் உரைநீடித்தது

## வெள்ளை மாளிகை பதற்றம்

அமெரிக்க வெள்ளை மாளிகை மைதானத்தில் சந்தேகத்திற்கு இடமான பொருள் ஒன்று காணப்பட்டதால் ஜனாதிபதி கிளின்ரன் உட்பட எவரையும் வெள்ளை மாளிகைக்கு வெளியே செல்லவும் உள்ளே பிரவேசிக்கவும் உளவுப்பிரிவினர் அனுமதி மறுத்தனர். இதனால் ஜனாதிபதி கிளின்டன் 15 நிமிடங்கள் வரை வெள்ளை மாளிகைக்குள் செல்ல முடியாது காத்திருக்க வேண்டியிருந்தது.

பத்திரிகைகளிலிருந்து வெட்டப்பட்ட செய்திகளைக் கொண்ட உறையே அந்த மர்மப்பொருள் என பின்னர் அதிகாரிகள் அறிந்துகொண்டனர். 8 அங்குல அகலமும் 11 அங்குல நீளமும் கொண்ட இந்த உறையில் வில்லியம் ஜெபர்சன் கிளின்டன் என பெயர் எழுதப்பட்டிருந்தது.

## டைம்ஸின் அச்சம்

[டில்லி]

விடுதலைப் புலிகள் இப் பிராந்தியத்தின் மிகப்பெரும் அச்சுறுத்தும் சக்தியாக மாறிவிட்டவர் என்று இந்துஸ்தான் டைம்ஸ் எனும் இந்திய பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வீதியில் கண்டெடுக்கப்பட்ட நா. சிதம்பரப்பிள்ளை என்பவரின் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான அனுமதிச் சீட்டு ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து ஆதாரம் காட்டிப் பெறவும்.

## தையல் பயிற்சி

ஸ்ரீலங்கா இராணுவ வன்முறைகளால் தமது சொந்த வதிவிடங்களை விட்டு இடம் பெயர்ந்து உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள முகாம்களில் தங்கி வாழுகின்ற ஐம்பது யுவதிகளுக்கு தேசிய சர்வோதய இயக்கத்தின் மருதனார்மடக் கிளையினர் இலவச தையல் பயிற்சிவகுப்பினை ஆரம்பித்து நடாத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## பதுங்கி

இதுபற்றி தான் வானொலி மூலம் கேட்டபோது காட்டு யானை வந்ததாகவும் அதனால் அதனைக் கலைக்க துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவும் யானை ஓடும் போது ஒரு சிப்பாயை காலினால் மிதித்துவிட்டு சென்றதாகவும் கூறப்பட்டது என்றார்.

கொல்லப்பட்டவர் மழை உடுப்பினால் மூடப்பட்டு தூக்கிவரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து நேரில் பார்த்த சிப்பாய் ஒருவர் கூறுகையில் காட்டு யானை மிரண்டு தம்மை நோக்கி ஓடிவந்த போது சிலர் மரத்தின் பின்னாலும் சிலர் தரையிலும் பதுங்கியதாக தெரிவித்தார்.

## 2வயது குழந்தையை கடத்திச் சென்று களவு

(கொழும்பு)

வடபகுதியில் இருந்து வந்து கொழும்பில் தங்கி நிற்கும் தமிழர்களிடம் சூறைபாடும் நபர்கள் புதுப்புது தந்திரோபாயங்களை தினம் தினம் கையாண்டு வருகின்றனர் அத்துடன் ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் இத்தகைய திருட்டுச் செயல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 8-ம் திகதி நடைபெற்ற சம்பவம் ஒன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு வயது பெண்குழந்தை ஒன்று தனது தாயாரிடமிருந்து தந்திரமான முறையில் அழைத்துச் செல்லப்பட்டு தங்கநகைகளும், உடையும் அபகரிக்கப்பட்டுள்ளன. இக் குழந்தை தெய்வாதீனமாக அன்று மாலையே தாயாரிடம் வந்து சேர்ந்தது. சுகவீனமுற்றிருந்த இக்குழந்தையை தாயார் பொரளையிலுள்ள லேடிறிட்ஜ்வே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றுள்ளார். சனக்கூட்டத்தின் நடுவே தாயார் பரபரப்பாக இருந்த சமயத்தில் குழந்தை எப்படியோ தத்தித்தத்தி வேறிடம் நகர்ந்துவிட்டது. சற்று நேரத்தில் அருகே குழந்தை இல்லாததைக் கண்டு தாயார் திகைத்தார். ஆஸ்பத்திரி எங்கும் தேடியும் குழந்தை கிட்டவில்லை. பொலிசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இதேவேளை அன்றைபதினம் மாலை ஆமர் வீதியில் உள்ள சைவ உணவகம் ஒன்றின் உரிமையாளர் அநாதையாக குழந்தை ஒன்று தம்மிடம் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவித்ததை அடுத்து குழந்தை மீட்கப்பட்டது.

இதன்போதே குழந்தையின் தங்கமோதிரம், தோடு என்பன அபகரிக்கப்பட்டிருந்தது பெறுமதியான உடையும் அகற்றப்பட்டு வேறொரு பெரியளவிலான உடை அணிவிக்கப்பட்டிருந்தது. தோடு அகற்றப்பட்டபோது காதில் காயம் ஏற்பட்டிருந்தது. காயத்திற்கு பவுடர் தடவப்பட்டிருந்தது. அக்கா ஒருவர் தன்னை அழைத்து சென்று இவற்றை கழற்றியதாக குழந்தை தெரிவித்தது.

## அரசின்

கள் மீதும் குடிமனைகள் மீதும் பாடசாலைகள், வைத்திய சாலைகள், ஆலயங்கள் மீதும் குண்டுவீச்சு மற்றும் எறிகணை தாக்குதல்களை சிறிலங்கா ஆயுதப்படையினர் ஈவு இரக்கமின்றி மேற்கொள்கின்றனர். இம் மனித விரோத செயல்களால் தமிழ் மக்களுக்கு அதிகளவு இழப்புகள் ஏற்படுகின்றன.

கடந்த 3 வருடங்களாகப் போடப்பட்டுள்ள பொருளாதாரத் தடையினால் உணவு, மருந்து, எரிபொருள், மின்சாரம் மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் அதிகளவு சிறுவர்கள் இறந்துள்ளனர். இவ்வாறு கூறப்பட்டுள்ள அவ் அறிக்கையில் உலக வங்கியால் வழங்கப்படும் உதவிகள் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதை நிறுத்துவதற்கு சிறிலங்கா அரசு மீது நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

## வெளி உலக

கள் சிறிலங்கா ஆயுதப் படைகளால் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசு குண்டுவீச்சு விமானங்கள் மூலம் தமிழர் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடாத்துவது, பொருளாதாரத் தடையை விதித்து தமிழர்களைப் பட்டினி போடுவது என்பன குறித்தும் இப் பத்திரிகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு தேவையான உணவுத் தொகையில் 32 வீதமானவைதான் அனுப்பப்படுகின்றன. இதனால் அங்கு போசாக்கு இன்மை நிலவுகிறது. பெருமளவு சிறுவர்கள் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

---

னுள்ள ஐந்து வருட காலத்தில் திருப்திகரமான சேவைகளைப் பூர்த்தி செய்தவராகவும் இருக்க வேண்டும் என்று கேட்கப் பட்டுள்ளது.

இப்பதவிக்கான சகல விண்ணப்பங்களும் இம் மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் தத்தமது பகுதிப்புடவைக்கைத்தொழில் பணிப்பாளர்ஊடாக அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது (24)

---

படவில்லை. அந்த மனமாற்றம் ஏற்படாத வரை, பெரும்பான்மை-சிறுபான்மையின மக்கள் மத்தியிலே இருக்கின்ற பிரச்சினைகளுக்குச் சரியான முறையிலே தீர்வு காணப்படாதவரை இப்படியான சட்டங்கள் அமுல் படுத்தப்படுவதைத் தவிர்க்க முடியாது. இவ்வாறு ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ஜனநாயகம் என்றால் பெரும்பான்மையினம் சிறுபான்மை மக்களின் உரிமைகளை அங்கீகரித்து, அவர்களின் மனதிலே இருக்கின்ற சந்தேகங்களைப் போக்கி, அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்திலே அவர்களை நடத்திச் செல்வதுதான். அந்த நிலைமை ஏற்படாத வரை ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கும். எனவே ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமென்றால், பல்வேறு இன மக்கள் வாழுகின்ற இந்த நாட்டிலே குறிப்பாகச் சிறுபான்மை மக்களின் உரிமை நிலை நாட்டப்பட வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஏற்பட்ட நிலைமைகளாலும் படிப்படியாகச் சிறுபான்மை மக்களின் மத்தியிலே ஏற்பட்ட பாதிப்

சாதாரண மனிதன் முதல் நாட்டின் தலைவர் வரை கொலை செய்யப்படுவதும் இன்று சகஜமாகி விட்டன. அதேபோல் அவ்வாறான நிகழ்வுகளை ஒரு வாரத்தில்—பத்து நாட்களில் மறந்துவிட்டு அடுத்தவற்றைப் பற்றி பேசுகின்ற நிலைமையும் இன்று வலுவடைந்து வருகின்றது.

அரசியல் தீர்வுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி என்று சொல்லப்படுகின்றது. அரசியல் தீர்வு என்றால் அரசியல் தீர்வொன்றைக் கண்டு பிடிப்பதற்கு ஏன் தயக்கம்? எமது நாட்டிலேயுள்ள நாம் தான் இதற்கு அரசியல் தீர்வைக் கண்டுபிடிக்க முடியும். இதற்கு வெளிநாடுகள்தேவையில்லை சர்வதேச ஆலோசனைகள்தேவையில்லை என்றார்.

## மரணம்

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் பிரபல தொழிற்சங்க வாதியுமான எச். என். பெர்னாண்டோ காலமானார்.

இவரது சகோதரியும், சிறிலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவருமான முன்னாள் ஜே.வி.பி.யின் தலைவர் ரோகண விஜவீரவின் மனைவியும், இருபுதல்விகளும் திருமலையில் இருந்து பாணந்துறை வந்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 15-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10601

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

40-1516, 24-0521, 26-7627 26-3130, 26-2391
26-5244, 28-3306, 28-3439, 42-3945, 27-6821
43-5726, 26-2125 26-5157, 27-7653, 28-0732
26-0673, 28-1049 27-9365, 26-8878, 24-0878
28-4707, 24-8391.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-9744, 24-1172, 42-6452

---

## காணவில்லை

11-8-93 அன்று சைக்கிளில் சென்ற செல்லையா குலசிங்கம் வயது 17 என்பவர் வீடு திரும்பவில்லை. பிறவுண் கலர் அரைக்கால்சட்டையும் வெள்ளைநிற சேட்டும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:
நா. செல்லையா
புதிய ஸ்ரேசன் முன்பாக,
கொக்குவில்.

[சி/7204]

---

## மரண அறிவித்தல்

### திரு. காசிப்பிள்ளை முத்தையா

(கோமதீஸ் ஸ்ரோர் உரிமையாளர் மன்னார்)

ஏழாலை மேற்கைச் சேர்ந்தவரும் தற்போது 24/3 மதவடி ஒழுங்கையைச் சேர்ந்தவருமான திரு. காசிப்பிள்ளை முத்தையா 15-8-93 இரவு 9 45 மணியளவில் சிவபதமடைந்தார். இவர் சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும் கோமதி, கேதீஸ்வரி ஸ்ரீ கரன் (சுவிஸ்) சுபாஜினி (யா. இ. ம. கல்லூரி A/L 93 வர்த்தகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். பவளகுமார் (கொழும்பு) ஜெகநாதன் (நாதன் வெல்டிங் வேக்ஸ் உரும்பராய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திவாகர், சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் சுப்பிரமணியம், செல்லத்துரை, துரைராசா, சண்முகம் காலஞ்சென்ற கோபாலுபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-8-93) பி. ப. 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
மு. க. சுப்பிரமணியம்
24/3 மதவடிலேன்,
யாழ்ப்பாணம்

(5700)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.